# பாடம் - 1

## பண்டைய இந்தியா : தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. **எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் ........................... எனப்படுகிறது.**
   அ) வரலாற்றுக்கு முந்தைய காலம் ஆ) வரலாற்றுக் காலம்
   இ) பழங் கற்காலம் ஈ) புதிய கற்காலம்
2. **வரலாற்றின் பழமையான காலம் .................................. ஆகும்.**
   அ) பழங் கற்காலம் ஆ) புதிய கற்காலம்
   இ) செம்புக் காலம் ஈ) இரும்புக் காலம்
3. **பழங் கற்காலக் கருவிகள் முதன்முதலில் ......................... இல் அடையாளம் காணப்பட்டன.**
   அ) 1860 ஆ) 1863 இ) 1873 ஈ) 1883
4. **மத்திய பிரதேசத்தில் உள்ள சோன் பள்ளத்தாக்கில் உள்ள பாகோர் -1, பாகோர்-3 ஆகியவை ........................................... நாகரிகம் நிலவிய இடங்கள்.**
   அ) கீழ்ப்பழங் கற்காலம் ஆ) இடைப்பழங் கற்காலம்
   இ) மேல்பழங் கற்காலம் ஈ) புதிய கற்காலம்
5. **மெஹர்கார் ........................................ பண்பாட்டுடன் தொடர்புடையது.**
   அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம்
   இ) இடைக் கற்காலம் ஈ) செம்புக்காலம்
6. **....................... கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன.**
   அ) க்யூனிபார்ம் ஆ) ஹைரோக்ளைபிக்ஸ் இ) தேவநாகரி ஈ) கரோஷ்டி
7. **பர்சஹோம் .................................. நிலவிய இடமாகும்**
   அ) காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு
   ஆ) கங்கைச் சமவெளியின் புதியகற்காலப் பண்பாடு
   இ) கிழக்கிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு
   ஈ) தென்னிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு
8. **தொடக்க ஹரப்பா காலகட்டம் என்பது .................................. ஆகும்.**
   அ) பொ.ஆ.மு. 3000 - 2600 ஆ) பொ.ஆ.மு. 2600 - 1900
   இ) பொ.ஆ.மு. 1900 - 1700 ஈ) பொ.ஆ.மு. 1700 - 1500
9. **ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ..................... இருந்தது.**
   அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல்
   இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன் பிடித்தல்
10. **சிந்து நாகரிகம் ஏறத்தாழ .................................... இலிருந்து வீழ்ச்சி அடைந்தது.**
    அ) பொ.ஆ.மு.1800 ஆ) பொ.ஆ.மு.1900
    இ) பொ.ஆ.மு.1950 ஈ) பொ.ஆ.மு.1955

## II. குறுகிய விடை தருக :

### 1. வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் :

- தொல்லியல் சான்றுகள், விலங்குகளின் எலும்புகள் மற்றும் படிமங்கள்.
- கற்கருவிகள், எலும்புக் கருவிகள், கைவினைப் பொருட்கள்.
- தொல்லியல் ஆய்விடங்கள், நிலவியல் அடுக்குகள், பாறை ஓவியங்கள்.

---

### 2. பழங் கற்காலம் பிரிக்கப்படும் முறை :

- பழங் கற்காலம் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது.
- 1. கீழ் பழங் கற்காலம் 2. இடைப் பழங் கற்காலம் 3. மேல் பழங் கற்காலம்
- பழங் கற்காலமே வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம்.

---

### 3. ஹோமினின் குறிப்பு :

- தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றம் கொண்ட மனித மூதாதையர்.
- ஹோமினின் ஆப்பிரிக்காவில் அதிகமாக வாழ்ந்தனர்.
- நர்மதை மனிதனின் மண்டையோடு ஹத்னோராவில் கிடைத்துள்ளது.

---

### 4. இடைக் கற்காலப் பண்பாட்டின் குறிப்பு :

- இடைக் கற்காலப் பண்பாட்டின் காலம் இடத்திற்கு இடம் மாறுபடும்.
- இந்தியாவில் ஏறத்தாழ பொ.ஆ.மு. 10,000 வாக்கில் தோன்றியது.
- கேரளா, தமிழ்நாட்டில் இரும்புக் காலத்தின் தொடக்கம் வரை நீடித்தது.

---

### 5. ஹரப்பா நாகரிகத்தின் வெவ்வேறு கட்டங்கள் :

- 1. தொடக்ககால ஹரப்பா நாகரிகம் ( பொ.ஆ.மு. 3000 - 2600 )
- 2. முதிர்ச்சி அடைந்த ஹரப்பா நாகரிகம் ( பொ.ஆ.மு. 2600 - 1900 )
- 3. பிற்கால ஹரப்பா நாகரிகம் ( பொ.ஆ.மு. 1900 - 1700 )

---

### 6. பெருங்குளம் குறிப்பு :

- நான்கு பக்கங்களிலும் நடைபாதை மற்றும் பல அறைகள் இருக்கின்றன.
- வடக்கிலும் தெற்கிலும் படிக்கட்டுகள், கழிவுநீர் வடிகால் வசதி உள்ளன.
- சுவர்கள் ஜிப்சம் கலந்த சுண்ணாம்பு சாந்தால் பூசப்பட்டு இருக்கின்றன.

---

### 7. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் :

- காலநிலை மாற்றம், வெள்ளப் பெருக்கு, ஆறு தன் போக்கை மாற்றியது.
- தொடர் வறட்சியின் காரணமாக ஆறுகள் மற்றும் நீர் நிலைகளின் மறைவு.
- அயலவர் படையெடுப்பு, மெசபடோமியாவுடன் வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி.

## III. சுருக்கமான விடை தருக :

### 1. அச்சூலியன், சோஹானியன் கருவித் தொழில்நுட்பம் :

| அச்சூலியன் கருவிகள் | சோஹானியன் கருவிகள் |
|---|---|
| ❖ அச்சூலியன் மரபு - கைக்கோடாரி வகைக் கருவிகளைக் கொண்டது. | ❖ சோஹானியன் மரபு - கூழாங்கல்லைச் செதுக்கி கருவிகளை உருவாக்கினர். |
| ❖ அச்சூலியன் மரபினர் பெருமளவில் கோடாரிகள், வெட்டுக் கத்திகள் ஆகியன பயன்படுத்தினர். | ❖ சோஹானியன் மரபினர் துண்டாக்கும் கருவிகள் மற்றும் அதைச் சார்ந்த கருவிகளைப் பயன்படுத்தினர். |

### 2. இந்தியாவின் இடைப் பழங் கற்காலத்தின் முக்கியக் கூறுகள் :

- திறந்த வெளியிலும், குகைகளிலும், பாறைப் படுக்கைகளிலும் வசித்தார்கள்.
- வேட்டையாடுதல், உணவைச் சேகரித்தல் ஆகியன முக்கியத் தொழில்.
- கருவிகள் சிறியதாயின. கோடாரியைப் பயன்படுத்தும் பழக்கம் குறைந்தது.
- கற்கருவி உற்பத்தியில் மூலக்கல்லை தயார் செய்யும் நுட்பத்தை பயன்படுத்தினர்.

### 3. இடைக் கற்கால நாகரிகம் நிலவிய இடங்கள் :

- இடைக் கற்காலம் ஒருசில பகுதிகள் தவிர இந்தியா முழுவதும் நிலவியது.
- தமிழ்நாடு - தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தேரிக் குன்றுகள்.
- ஆந்திரம் - சனகனகல்லு" கர்நாடகம் - கிப்பன ஹள்ளி" பீகார் - பயிஸ்ரா.
- குஜராத் - லங்ஜன்" உத்திரப் பிரதேசம் - சாராய் நகர், தம்தமா.

### 4. இடைக் கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் :

- ஓரளவு நிரந்தர மற்றும் தற்காலிகக் குடியிருப்புகளில் வசித்தனர்.
- திறந்த வெளியிலும், குகைகளிலும் வசித்தனர். இறந்தோரைப் புதைத்தனர்.
- கலைத் திறன் மிக்கவர்களாக இருந்ததை பிம்பேட்காவில் காணமுடிகிறது.
- சிறிய விலங்குகள், பறவைகளை வேட்டையாட நுண் கற்கருவிகள் உதவின.

### 5. சிந்து நாகரிகம் நிலவிய பகுதியின் எல்லைகள் :

- கிழக்கு - உத்திரப் பிரதேசத்தில் உள்ள ஆலம்கிர்புர்
- மேற்கு - பாகிஸ்தான், ஈரான் எல்லையின் சட்காஜென் - டோர் குடியிருப்புகள்
- வடக்கு - ஆப்கானிஸ்தானில் உள்ள ஷார்ட்டுகை.
- தெற்கு - மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள தைமாபாத்.

### 6. ஹரப்பா பொருளாதாரத்துக்கு பங்களித்த கைவினைத் தயாரிப்புகள் :

- மணிகள் செய்தல், சங்கு வளையல்கள் செய்தல் மற்றும் உலோக வேலைகள்
- தங்கம், செம்பு, வெண்கலம், பீங்கான் ஆகியவற்றிலான அணிகலன்கள்.
- சங்கு, சுடுமண், கார்னிலியன் மணிகள் ஆகியவற்றிலான அணிகலன்கள்.
- கிரிஸ்டல் (படிகக்கல்), ஸ்டீட்டைட் (நுரைக்கல்) ஆகியவற்றிலான அணிகலன்கள்.

---

### 7. ஹரப்பா மக்களின் நம்பிக்கைகள் :

- இறை நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இயற்கையை வழிபட்டனர்.
- அரச மரம், தாய் தெய்வம் போன்ற சுடுமண் உருவங்களை வழிபட்டனர்.
- இறப்பிற்கு பின்னரான வாழ்க்கையில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.
- புதைகுழிகளில் மட்பாண்டங்கள், அணிகலன்கள், மணிகள் வைத்தனர்.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. வரலாற்றுக்கு முந்தைய இந்தியா :

- வரலாற்றுக்கு முந்தைய இந்தியா என்பது எழுத்துமுறை தோன்றாத காலமாகும்.
- கற்காலம், வெண்கலக் காலம், செம்புக் காலம், இரும்புக் காலம் எனப் பிரிக்கலாம்.
- இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்கதேசம் முழுவதும் ஒரே பகுதி.
- இந்தியாவில் 10 முதல் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தார்கள்.
- முதலில் நாகரிகம் கண்டறியப்பட்ட இடத்தின் பெயரை பண்பாடுக்கு சூட்டினர்.
- மக்கள் பயன்படுத்திய பொருட்கள் அடிப்படையிலும் பண்பாடுக்கு பெயரிட்டனர்.
- வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த ஹரப்பா பண்பாடு கண்டறியப்பட்டது.
- இந்தியாவில் ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு நிலவியது.

---

### 2. கீழ் மற்றும் இடைப் பழங்கற்காலப் பண்பாடுகள் - ஒப்பீடு :

#### கீழ்ப் பழங்கற்காலப் பண்பாடு :

- சென்னைக்கருகில் பல்லாவரத்தில் இராபர்ட் புரூஸ் பூட் அடையாளம் கண்டார்.
- பரவல் - அத்திரம்பாக்கம், பல்லாவரம், குடியம், பிம்பெட்கா, இசாம்பூர் ஆகியன.
- கோடாரிகள், துண்டாக்கும் கருவிகள், பிளக்கும் கருவிகள் உருவாக்கினர்.
- கற்கருவிகளை வடிவமைக்க சுத்தியல் போன்ற கற்களைப் பயன்படுத்தினர்.

#### இடைப் பழங்கற்காலப் பண்பாடு :

- பிரவாரா ஆற்றங்கரையில் நெவாசாவில் H. D. சங்கலியா அடையாளம் கண்டார்.
- பரவல் - யமுனை, நர்மதை, கிருஷ்ணா, கோதாவரி, ஆறுகளின் சமவெளிகள்.
- சுரண்டும் கருவிகள், துளையிடும் கருவிகள் போன்றவற்றை உருவாக்கினர்.
- கருவிகள் சிறியதாயின. கோடாரியைப் பயன்படுத்தும் பழக்கம் குறைந்தது.

### 3. காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு ஹரப்பா நாகரிகத்தின் காலத்தைச் சேர்ந்தது :

- காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடும் ஹரப்பா நாகரிகமும் சமகாலத்தவை.
- காஷ்மீரில் உள்ள பர்சாஹோம் முக்கியமான புதிய கற்கால ஆய்விடமாகும்.
- பர்சாஹோமைச் சேர்ந்த மக்கள் ஹரப்பா மக்களோடு வணிகத்தில் ஈடுபட்டனர்.
- கோதுமை, பார்லி, பட்டாணி, பருப்பு ஆகிய விதைகள் கண்டெடுக்கப்பட்டன.
- சிவப்பு நிற மட்பாண்டங்கள், செம்பாலான அம்புகள் ஆகியவற்றை செய்தார்கள்.
- கார்னிலியன் மணிகளையும், வண்ணம் பூசிய பானைகளையும் பயன்படுத்தினர்.
- துணியில் விலங்குகளின் தோலைச் சேர்த்து தைக்கும் குத்தூசிகள் பயன்பட்டன.

---

### 4. தென்னிந்தியாவில் புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்கள், முக்கிய கூறுகள் :

- கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, துங்கபத்திரா சமவெளிகளில் நிலவியது.
- கர்நாடகாவில் - பிரம்மகிரி, மாஸ்கி, வடகல் ஆகிய இடங்கள்.
- ஆந்திராவில் - நாகர்ஜூன கொண்டா, ராமாபுரம், வீராபுரம் ஆகிய இடங்கள்.
- தமிழ்நாட்டில் - பையம்பள்ளி மற்றும் காவிரி ஆற்றின் சமவெளிகள்.
- ஒரு சாம்பல் மேட்டைச் சுற்றிலும் குடியிருப்புகள் சூழ்ந்த கட்டமைப்பு இருந்தன.
- மெல்லிய சாம்பலும், சிதைக்கப்பட்ட மாட்டுச்சாண அடுக்குகளும் கிடைத்தன.
- சாம்பல் மேட்டைச் சுற்றிலும் வீடுகளும் புதை குழிகளும் காணப்படுகின்றன.

---

### 5. ஹரப்பா நாகரிகம் என்று சிந்து நாகரிகம் அழைக்கப்படக் காரணங்கள் :

- சிந்து நாகரிகத்தின் அடையாளம் முதலில் ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்டது.
- முதலில் கண்டறியப்பட்ட இடத்தின் பெயரால் ஹரப்பா நாகரிகம் என்றழைக்கின்றனர்.
- லாகூரில் இருந்து முல்தானுக்கு ரயில்பாதை அமைக்கும் பணி நடைபெற்றது.
- ரயில்பாதை அமைக்கும் பணியின் போதுதான் ஹரப்பா நகரம் கண்டறியப்பட்டது.
- அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் ஹரப்பாவில் ஒரு முத்திரையைக் கண்டெடுத்தார்.
- ஹரப்பாவில் ஆய்வுகள் மேற்கொள்ள சர் ஜான் மார்ஷல் காரணமாக இருந்தார்.
- 1940 ஆம் ஆண்டுகளில் மார்டிமர் வீலர் ஹரப்பாவில் ஆய்வுகள் நடத்தினார்.

---

### 6. திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ - சிறப்புகள் :

- ஹரப்பா - பாதுகாப்பு அரண்கள், திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள் இருந்தன.
- கட்டுமானத்துக்கு சுட்ட மற்றும் சுடாத செங்கற்களைப் பயன்படுத்தி உள்ளனர்.
- நகரங்கள் சட்டக வடிவமைப்பைக் கொண்டதாக அமைக்கப்பட்டு இருந்தன.
- மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம்.
- பெருங்குளம் நீர் புகாதபடி ஜிப்சம் செறிந்த சுண்ணாம்பு சாந்தால் பூசப்பட்டிருந்தன.
- வீடுகள், கழிவுநீர் வடிகால்கள் சுட்ட செங்கற்களால் திட்டமிட்டு கட்டப்பட்டன.
- வீடுகளும் குளியலறைகளும் கழிவுநீர் வடிகாலுடன் இணைக்கப்பட்டன.

# பாடம் - 2

## பண்டைய இந்தியா : செம்புக்கால, பெருங்கற்கால, இரும்புக்கால, வேதகாலப் பண்பாடுகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. வேதப் பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர் ..................................**

அ) பிராமணங்கள் ஆ) சங்கிதைகள்

இ) ஆரண்யகங்கள் ஈ) உபநிடதங்கள்

**2. மேல் கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) குருபாஞ்சலம் ஆ) கங்கைச் சமவெளி

இ) சிந்துவெளி ஈ) விதேகா

**3. ஆதிச்சநல்லூர் .................................... மாவட்டத்தில் அமைந்துள்ளது.**

அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி

இ) தூத்துக்குடி ஈ) வேலூர்

**4. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.**

(i) சேனானி - படைத்தளபதி

(ii) கிராமணி - கிராமத் தலைவர்

(iii) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது

(iv) புரோகிதர் - ஆளுநர்

**மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?**

அ) i ஆ) ii இ) iii ஈ) iv

**5. கீழ்காணும் கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று (கூ) :** முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

**காரணம் (கா) :** பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளில் இருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரியானது. காரணம் தவறானது. ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறானவை.

---

### II. குறுகிய விடை தருக :

**1. வேதகால இலக்கியங்கள் :**

- நான்கு வேதங்களான ரிக், யஜுர், சாம, அதர்வ வேதங்கள்.
- வேதப் பாடல்களின் தொகுப்பான சங்கிதைகள் மற்றும் பிராமணங்கள்.
- ஆரண்யகங்கள், உபநிடதங்கள் வேதகாலத்தின் இறுதியில் தோன்றின.

### 2. ஜெண்ட் அவஸ்தா :

- ஜொராஸ்டிரிய மதத்தைச் சேர்ந்த பாரசீக / ஈரானிய மொழி நூலாகும்.
- இந்தோ - ஈரானிய மொழி மக்களின் நிலப்பரப்பு, கடவுள்கள் பற்றி கூறுகிறது.
- வேத சமஸ்கிருதச் சொற்களோடு மொழி ஒப்புமை கொண்டுள்ளது.

---

### 3. தொடக்க வேத காலத்தில் பெண்களின் நிலை :

- தொடக்க வேத காலத்தில் பெண்கள் உயரிய இடத்தை வகித்தனர்.
- கிராமக் கூட்டங்களிலும் வேள்விகளிலும் பங்கெடுத்தனர்.
- பலதார மணமும் மறுமணமும் வழக்கத்தில் இருந்துள்ளது.

---

### 4. ரிக்வேதக் கடவுள்கள் :

- ரிக்வேதக் காலத்தில் புரந்தரா என்ற இந்திரனே முக்கியக் கடவுள்.
- இருளை நீக்கும் கடவுள் சூரியன். நீர்க் கடவுள் வருணா.
- வலிமையின் கடவுள் மாருத். தாவரங்களின் கடவுள் சோமா.
- உஷா எனும் பெண் கடவுள் விடியலின் கடவுள்.

---

### 5. இந்தியாவின் இரும்புக் காலம் :

- இந்தியாவில் இரும்புக் காலமானது இருவேறு பண்பாட்டைக் கொண்டுள்ளது.
- வட இந்தியா - ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு.
- தென் இந்தியா - ஈமச் சின்னங்களுடன் கூடிய பெருங்கற்கால பண்பாடு.

---

## III. சுருக்கமான விடை தருக :

### 1. தென் இந்தியாவில் செம்புகாலப் பண்பாடுகள் :

- செம்புகாலப் பண்பாடு தென் இந்தியாவில் நிலவியதற்கான சான்றுகள் இல்லை.
- துளையிட்ட பாண்டங்கள், கெண்டி வடிவிலானப் பாண்டங்கள் கிடைத்துள்ளன.
- கற்கருவிகளும் இருந்தன. பழங்கள், இலைகள், கிழங்குகள் ஆகியன உண்டனர்.
- வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் மக்களின் முக்கிய வாழ்வாதாரமாகும்.

---

### 2. தொடக்க வேதகாலத்தின் புவியியல் பரவல்கள் :

- தொடக்க வேதகாலம் இந்தியத் துணைக் கண்டத்தின் சில பகுதிகளில் நிலவியது.
- கிழக்கு ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ளது.
- இந்தியாவில் பஞ்சாப் மற்றும் மேற்கு உத்திரப் பிரதேசம் ஆகிய பகுதிகள்.
- தொடக்க வேதகால வசிப்பிடங்கள் பற்றி ரிக் வேதப் பாடல்கள் தெரிவிக்கிறது.

### 3. ரிக் வேதகால சமூகப் பிரிவுகள் :

- ◈ புருஷ பலியிடப்பட்ட போது அவனுடைய வாயிலிருந்து பிராமணர்கள் தோன்றினர்.
- ◈ அதேபோல் அவனுடைய இரண்டு கைகளில் இருந்து சத்திரியர்கள் தோன்றினர்.
- ◈ தொடைகளில் இருந்து வைசியர்களும், கால்களில் இருந்து சூத்திரர்களும் தோன்றினர்.
- ◈ போர் புரிவோரும், கால்நடை வளர்ப்போரும், வேளாண்மை செய்வோரும் இருந்தனர்.

---

### 4. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகள் :

- ◈ மேய்ச்சல் சமூகத்தில் கால்நடைகளை மையப்படுத்தி பல மோதல்கள் நடைபெற்றன.
- ◈ மேய்ச்சல் சமூகம் இனக் குழுக்கள், மரபுவழிக் குடும்பங்களை கொண்டிருந்தன.
- ◈ மேய்ச்சல் தொழிலுக்கு அடுத்த நிலையிலேயே வேளாண்மை தொழில் இருந்தது.
- ◈ வர்ணக் கோட்பாடு தோன்றிவிட்டாலும் மேய்ச்சல் சமூகத்தில் பாகுபாடுகள் இல்லை.

---

### 5. தொடக்க வேதகால சமூகத்திற்கும் பின் வேதகால சமூகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் :

| தொடக்க வேதகால சமூகம் | பின் வேதகால சமூகம் |
|---|---|
| ◈ ஆரியர்கள் ஏனைய மக்களிடம் இருந்து மேம்படுத்திக் காட்டிக் கொண்டனர்.<br>◈ நிறம், வகையைச் சுட்டிக்காட்ட வர்ண என்ற சொல் பயன்படுத்தினர். | ◈ வர்ண அடிப்படையிலான சமூகப் படிநிலை ஆழமாகக் காலூன்றியது.<br>◈ சூத்திரர்களுக்கும் கீழாக சில சமூகக் குழுக்கள் வைக்கப்பட்டன. |
| ◈ சமூகத்தில் பெண்கள் மிகவும் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டனர்.<br>◈ பெண்கள் கிராமக் கூட்டங்களிலும் வேள்விகளிலும் பங்கெடுத்தனர். | ◈ சமூகத்தில் பெண்களின் நிலைமை தாழ்ந்து காணப்பட்டது.<br>◈ பெண் குழந்தைகள் பிரச்சனைகளின் தோற்றுவாய் என கருதப்பட்டனர். |

---

## IV. விரிவான விடை தருக :

### 1. இந்தியாவில் பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்ட பண்பாடுகள் :

- ◈ வடஇந்தியாவில் பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டன.
- ◈ பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் செம்புக் காலப் பண்பாட்டுடன் தொடர்புடையது.
- ◈ மட்பாண்டங்கள் சிவப்புநிற அடிப்புறத்தின் மேல் பழுப்பு மஞ்சள் நிறம் கொண்டுள்ளது.
- ◈ அதில் ஜாடிகள், கொள்கலன்கள், தட்டுகள், கிண்ணங்கள் போன்றவைகள் உள்ளன.
- ◈ வீடுகளில் மேற்கூரை, மரதட்டிகளின் மேல் களிமண் பூசப்பட்ட சுவர்கள் இருந்தன.
- ◈ செம்பாலான உருவங்களும் ஏனைய பொருள்களும் அதிகம் கிடைத்துள்ளன.
- ◈ இப்பண்பாடு "செம்பு பொருட்குவியல் பண்பாடு" என்று அழைக்கப்படுகிறது.
- ◈ சிந்து - கங்கை சமவெளியில் தொடக்க வேதகாலப் பண்பாடோடு தொடர்புடையது.

## 2. தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்கள் :

**ஆதிச்சநல்லூர் :**

- ◈ தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது. தாழிகள், மட்பாண்டங்கள் அதிகம் உள்ளன.
- ◈ ஆணிகள், கல்மணிகள், ஆயுதங்கள், வெண்கல பொம்மைகள் கிடைத்துள்ளன.

**பையம்பள்ளி :**

- ◈ வேலூர் மாவட்டத்தில் உள்ளது. இங்கு 1906 இல் அகழ்வாய்வு நடைபெற்றது.
- ◈ கருப்பு மற்றும் சிவப்பு நிற மட்பாண்டங்கள், ஈமத் தாழிகள் கண்டறியப்பட்டன.

**கொடுமணல் :**

- ◈ ஈரோடு மாவட்டத்தில் உள்ளது. அண்மையில் 2012 இல் அகழ்வாய்வு நடந்தது.
- ◈ மட்பாண்டங்கள், ஆயுதங்கள், கருவிகள், அணிகலன்கள், மணிகள் கிடைத்துள்ளன.

---

## 3. வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் :

**அ) தொடக்க வேதகாலம் :**

- ◈ தொடக்க வேதகால அரசியல் என்பது இனக்குழுக்களின் அரசியலே ஆகும்.
- ◈ இனக்குழுவின் தலைவர் ராஜன் (அரசன்) என்று அழைக்கப்பட்டார்.
- ◈ அரசருடைய முக்கியப் பணி இனக்குழுவைக் காப்பது, எதிரிகளோடு போரிடுவது.
- ◈ சபா, சமிதி, விததா, கணா ஆகிய அமைப்புகள் அரசியலில் பங்கேற்றன.

**ஆ) பிந்தைய வேதகாலம் :**

- ◈ அரசர் வாஜ்பேயம், ராஜசூயம், அஸ்வமேதம் யாகங்களை நடத்தினார்.
- ◈ முடியாட்சி முறை வலுப்பெற்றதால் அரசரின் அதிகாரம் பெருகியது.
- ◈ பேரரசுகள் தோன்றி சாம்ராட், சாம்ராஜ் போன்ற கோட்பாடுகள் வளர்ச்சி பெற்றன.
- ◈ சபா, சமிதி, விததா, கணா ஆகிய அமைப்புகள் அரசியலில் செல்வாக்கு இழந்தன.

---

# பாடம் - 3

## பிரதேச முடியரசுகளின் தோற்றமும் புதிய மதப்பிரிவுகள் உருவாக்கமும்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. புத்தர் தனது முதல் போதனையை ...................... இல் நிகழ்த்தினார்.**

அ) சாஞ்சி　　ஆ) வாரணாசி　　**இ) சாரநாத்**　　ஈ) லும்பினி

**2. அஜாத சத்ருவுக்கும் புத்தருக்கும் இடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல்.**

அ) சீவகசிந்தாமணி　　ஆ) அச்சரங்க சூத்திரம்

இ) கல்பசூத்திரம்　　**ஈ) சமண்ணப சுத்தம்**

**3. பகவதி சூத்திரம் ஒரு ...................... நூலாகும்**

அ) பௌத்தம்　　**ஆ) சமணம்**　　இ) ஆசீவகம்　　ஈ) வேதம்

4. ............................. வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.

அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

5. வடஇந்தியாவில் இருந்த 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு ................................

அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு

## II. குறுகிய விடை தருக :

### 1. நமது ஆய்வுக்கு சான்றாக உள்ள திரிபிடகங்கள் :

- பாலி மொழியில் எழுதப்பட்ட பௌத்த சட்டங்களே திரிபிடகங்கள்.
- அவையாவன: வினய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம்.
- மூன்று கூடைகள் என்றும் திரிபிடகங்கள் அழைக்கப்பட்டன.

### 2. சார்வாகம் குறிப்பு :

- சார்வாகம் என்பது இந்திய பொருள் முதல்வாதத்தைக் குறிக்கிறது.
- அது சார்வாகர் என்பவர் பெயரால் அழைக்கப்படுகிறது.
- சார்வாகரும், அஜித கேசகம்பளியும் இந்திய பொருள் முதல்வாதத்தை உருவாக்கினர்.

### 3. மகாவீரருடைய போதனைகளின் மையக் கருத்து :

- மகாவீரரின் போதனைகளின் மையக் கருத்து அகிம்சையை வலியுறுத்தினார்.
- திரிரத்தினங்கள் - நல்ல நம்பிக்கை, நல்ல அறிவு, நல்ல நடத்தை.
- துறவிகள் ஐம்பெரும் சூளுரைகளை மேற்கொள்ள வேண்டும் என போதித்தார்.

### 4. ஜனபதங்களுக்கும், மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாடு :

| ஜனபதங்கள் | மகாஜன பதங்கள் |
|---|---|
| கங்கை சமவெளியிலிருந்த சிறுநாடுகளே ஜனபதங்கள். அவற்றில் சில குடியரசுகள். | சில ஜனபதங்கள் மற்ற ஜனபதங்களை கைப்பற்றி மகாஜனபதங்களாக மாறின. |
| வளங்களுக்காக மற்றும் அரசியல் ரீதியாக மேலாதிக்கம் செலுத்த சண்டையிட்டன. | மகாஜனபதங்கள் என்ற மக்களை ஆட்சி செய்த முடியரசுகள் உருவாயின. |

### 5. தமிழ்நாட்டின் பௌத்த வரலாற்றில் நாகப்பட்டினத்தின் முக்கியத்துவம் :

- இரண்டாம் நரசிம்ம வர்மன் ஆட்சியில் ஒரு பௌத்த கோயில் கட்டப்பட்டது.
- முதலாம் இராஜராஜ சோழன் ஆட்சியில் ஒரு பௌத்த கோயில் கட்டப்பட்டது.
- சீனத் துறவி வு-கிங் நாகப்பட்டினம் பௌத்த மடத்துக்கு வருகை தந்தார்.

## III. சுருக்கமான விடை தருக :

### 1. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு :

- இரும்புக் கோடாரிகள் காடுகளைத் திருத்துவதில் முக்கியப் பங்காற்றியது.
- இரும்புக் கத்திகள், மண்வெட்டிகள் காடுகளைத் திருத்தப் பேருதவி புரிந்தன.
- இரும்புக் கொழுமுனை கொண்ட கலப்பைகள் காடுகளை வேளாண் நிலமாக்கியது.
- மரவேலைகள், கைவினைப் பொருட்கள் செய்ய இரும்புக் கருவிகள் பயன்பட்டன.

---

### 2. கங்கைச் சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்துக்கான காரணங்கள் :

- வேளாண் உபரி - வேளாண்மை செழித்ததால் உற்பத்தி வேகமாக அதிகரித்தது.
- கைத்தொழில் - மக்கள் ஓய்வு நேரத்தை கைத்தொழில் வளர்ச்சிக்கு பயன்படுத்தினர்.
- வணிக வளர்ச்சி - வேளாண் உபரியும், கைவினைப் பொருட்களும் ஏற்றுமதியாயின.
- மக்கள் தொகை பெருக்கம் - ஆடம்பர பாண்டங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

---

### 3. இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு வளர்ச்சி பெற்ற நகரங்கள் :

- கங்கைச் சமவெளியில் நகரங்கள் தோன்றியதே இரண்டாம் நகரமயமாக்கம் ஆகும்.
- அரசியல் நிர்வாக மையங்கள் - ராஜகிருகம், சிராஸ்வதி, கௌசாம்பி, சம்பா
- வணிக நகரங்கள் - உஜ்ஜையினி, தட்சசீலம் நன்கு வளர்ச்சி பெற்றன.
- சிறந்த புனிதத் தலங்கள் - வைசாலி, புத்தகயா ஆகிய நகரங்கள்.

---

### 4. பொ.ஆ.மு. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டு அவைதீக சிந்தனையாளர்கள் :

- பொ.ஆ.மு. 6 மற்றும் 5 ஆம் நூற்றாண்டுகளே இந்தியாவில் அறிவு மலர்ச்சி காலம்.
- கோசலர், கௌதம புத்தர், மகாவீரர், அஜித கேசகம்பளி ஆகியோர் தோன்றினர்.
- ஆன்மா, மனம், உடல் ஆகிய வேதக் கருத்துக்களை கேள்விக்கு உட்படுத்தினர்.
- புதிய மதங்களைத் தோற்றுவித்தனர். சமணமும் பௌத்தமும் பிரபலமாயின.

---

### 5. தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கு :

- பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் சமணம் வேகமாகப் பரவியது.
- மதுரை உள்ளிட்ட இடங்களில் சமணர்களின் குகைகள், கற்படுக்கைகள் உள்ளன.
- தமிழில் சமண மத நூல்கள் - நாலடியார், பழமொழி, சீவக சிந்தாமணி, நீலகேசி.
- திருப்பருத்திக் குன்றம் சமணக் கோயில் ‘சமணக் காஞ்சி’ என அழைக்கப்படுகிறது.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. பொ.ஆ.மு ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக்கான காரணங்கள் :

- புதிய அரசுகள் உருவாக்கம் மனிதனின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியது.
- வேத மதத்தின் கடுமையான நடைமுறைகளுக்கு எதிரான சிந்தனை தோன்றியது.
- மேட்டுக்குடி மக்கள் சமூக அமைப்பு குறித்து அதிருப்தி கொண்டிருந்தனர்.

- வேத மதம் இந்தியாவில் சமூகத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவவில்லை.
- புதிதாகத் தோன்றிய அவைதீக மதங்களை பின்னற்றுவது கடினமாக இல்லை.
- பிராமணர்களுக்கு மட்டுமே ஆசிரமங்களாகப் பிரிக்கப்பட்ட வாழ்க்கை முறை.
- நகரமயமாக்கம், வணிக விரிவாக்கம் ஏற்பட்டதால் புதிய வர்க்கம் உருவானது.
- மக்கள் தமது பொருளாதார நிலைக்கு ஏற்ற சமூக தகுதியைக் கோரினார்கள்.

---

### 2. ஆசீவகம் விளக்கம் - இந்தியாவில் அதன் பரவல் :

- ஆசீவகம் மதப்பிரிவு துறவிகள் குழுக்கள் ஒன்றிலிருந்து உருவானது.
- நந்தவாச்சா என்ற துறவியே ஆசீவகம் பிரிவைத் தோற்றுவித்தவர்.
- நிர்வாணத் துறவிகளான ஆசீவகர்கள் ஊழ்வினைக் கோட்பாட்டை நம்பினார்கள்.
- ஆசீவகர்களில் தலைசிறந்தவர் மக்காலி கோசலர் ஆவார்.
- ஆசீவகத்தின் தலைமையிடமாக சிராவஸ்தி விளங்கியது.
- ஆசீவகர்களின் அடிப்படைக் கொள்கை நியதி அல்லது விதி.
- ஆசீவகத்தின்படி, வாழ்வில் தவிர்க்க முடியாத ஆறு அம்சங்கள் இருக்கின்றன.
- அவையாவன: லாபம், நஷ்டம், இன்பம், துன்பம், வாழ்வு, மரணம்.
- ஆசீவகம் செல்வாக்குடன் இல்லை என்றாலும் நாடு முழுவதும் பரவி இருந்தது.
- குயவர்கள், வங்கியாளர்கள் போன்ற துறவறம் பூணாத சீடர்கள் இருந்தனர்.

---

### 3. சமணத்தில் ஏற்பட்ட பிளவு :

- மகாவீர் மறைந்து 500 ஆண்டுகள் கழித்து சமணத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது.
- மகதத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டதால் பல சமணத் துறவிகள் வெளியேறினார்கள்.
- பத்ரபாஹு தலைமையில் சில சமணத் துறவிகள் தெற்கு நோக்கிச் சென்றார்கள்.
- உடைகள் எதுவுமின்றி இருந்த இவர்கள் திகம்பரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- ஸ்தூலபத்திரர் தலைமையில் மற்ற சமணத் துறவிகள் மகதத்திலேயே தங்கினார்கள்.
- வெள்ளை ஆடையை உடுத்திய இவர்கள் ஸ்வேதாம்பரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- சமணத்தில் ஏற்பட்ட இந்த பிளவு மகதத்தில் சமணத்தைப் பலவீனப்படுத்தியது.
- ஸ்தூலபத்திரர் பாடலிபுத்திரத்தில் ஒரு பெரிய சமண சமய மாநாட்டை நடத்தினார்.

---

### 4. புத்தரின் எண்வழிப் பாதை :

- புத்தர் துன்பம் குறித்த நான்கு பெரும் உண்மைகளை வெளியிட்டார்.
- புத்தர் ஆசையே துன்பத்திற்கு காரணம் என்ற கருத்தை வெளியிட்டார்.
- துன்பத்தில் இருந்து விடுதலை பெற எண்வழிப் பாதையை கடைபிடிக்கக் கூறினார்.
- எண்வழிப் பாதை வேறுபெயர்கள் - மத்திமப் பாதை அல்லது அட்டாங்க மார்க்கம்.
- புத்தரின் எண்வழிப் பாதை ( அட்டாங்க மார்க்கம் ) :

| | | | |
|---|---|---|---|
| 1. நல்ல நம்பிக்கை | 2. நல்ல ஆர்வம் | 3. நல்ல வாய்மை | 4. நல்ல செயல் |
| 5. நல்ல வாழ்க்கை | 6. நல்ல முயற்சி | 7. நல்ல சிந்தனை | 8. நல்ல தியானம் |

**5. இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் :**

- பௌத்த மதத்தில் பல பிரிவுகள் தோன்றி அதன் உண்மைத் தன்மையை இழந்தது.
- ஹீனயானா, மகாயானா, வஜ்ராயனா, சகஜயானா போன்ற பிரிவுகள் தோன்றின.
- மக்களின் மொழியான பாலி, பிராகிருதம் ஆகியன தமது செல்வாக்கை இழந்தன.
- பௌத்த மதச் செய்திகள் சமஸ்கிருத மொழியில் வெளியாக ஆரம்பித்தது.
- ஹர்ஷ வர்த்தனருக்குப் பிறகு பௌத்த மதம் அரசர்களின் ஆதரவை இழந்தது.
- ஹூணர்கள் படையெடுப்பு - ஹூணர்கள் பௌத்த மதத்தினரை வெறுத்தனர்.
- இராஜபுத்திரர்கள் பௌத்த மதத்தினரைத் துன்புறுத்தி கொல்வதில் ஈடுபட்டனர்.
- அரேபியர், துருக்கியர் படையெடுப்புகள் பௌத்த துறவிகளை வெளியேற்றியது.

---

# பாடம் - 4

## அரசு மற்றும் பேரரசு உருவாக்கம்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. **அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர் .............**

   அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்
   இ) சர்ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

2. **மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர், ஹர்யங்கா வம்சத்தை சேர்ந்த ............................**

   அ) பிம்பிசாரர் ஆ) அஜாசத்ரு இ) அசோகர் ஈ) மகாபத்ம நந்தர்

3. **.................................. என்ற இலங்கையில் கிடைத்த, பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல் மௌரியப் பேரரசு பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.**

   அ) மகாவம்சம் ஆ) தீபவம்சம் இ) பிரமாணம் ஈ) முத்ராராட்சசம்

4. **.................................. என்ற விசாகதத்தரின் நாடகம் சந்திரகுப்தர் பற்றியும், அவர் மகதப் பேரரசின் அரியணை ஏறியது பற்றியும் கூறுகிறது.**

   அ) முத்ராராட்சசம் ஆ) ராஜதரங்கிணி இ) அர்த்தசாஸ்திரம் ஈ) இண்டிகா

5. **மெகஸ்தனிஸ் எழுதிய ................................................ சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.**

   அ) இண்டிகா ஆ) முத்ராராட்சசம் இ) அஷ்டத்யாயி ஈ) அர்த்தசாஸ்திரம்

6. **.................................... நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.**

   அ) அர்த்தசாஸ்திரம் ஆ) இண்டிகா இ) ராஜதரங்கிணி ஈ) முத்ராராட்சசம்

---

### II. குறுகிய விடை தருக :

**1. பிம்பிசாரர் மகதப் பேரரசை விரிவுபடுத்திய விதம் :**

- மகதப் பேரரசை திருமண உறவுகள் மற்றும் போர்கள் மூலம் விரிவுபடுத்தினார்.
- லிச்சாவி, மாத்ரா இளவரசிகளை மணந்தார். அங்கம் போர் மூலம் இணைத்தார்.
- தனது சகோதரியை கோசல அரசனுக்கு மணம் முடித்து காசியை பரிசாக பெற்றார்.

**2. மஹாபத்ம நந்தர் - குறிப்பு :**

- மகத நாட்டை ஆட்சி செய்த முதல் நந்த அரசர் மஹாபத்ம நந்தர்.
- சிசுநாக அரசரைக் கொன்று விட்டு மஹாபத்ம நந்தர் அரியணை ஏறினார்.
- அவரது அதிகாரம் எதிரிகளுக்கு அச்சமூட்டியது.

---

**3. ஒரு மையப்படுத்தப்பட்ட அரசின் முக்கிய பண்புகள் :**

- பேரரசின் முழுவதும் ஒரே மாதிரியான நிர்வாக அமைப்பு காணப்படும்.
- அதிகார வர்க்கத்தை உருவாக்குதல், வரிகள் மூலம் நிதி திரட்டுதல்.
- நாட்டை நிர்வாகித்தல் மற்றும் இராணுவத்தை வழி நடத்துதல்.

---

## III. சுருக்கமான விடை தருக :

**1. தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் தெரிய வரும் நகரப் பண்புகள் :**

- போக்குவரத்து வசதிக்காக ஆறுகளை ஒட்டியப் பகுதிகளில் அமைந்திருந்தன.
- பாதுகாப்பிற்காக அகழிகளும், கோட்டைச் சுவர்களும் அமைக்கப்பட்டு இருந்தன.
- நகரங்களில் உறைகிணறுகள், கழிவுநீர் கால்வாய்கள், குடிமை வசதிகள் இருந்தன.
- வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டு இருந்தன. சுகாதார வசதிகள் காணப்பட்டன.

---

**2. கங்கைச் சமவெளியின் முடியாட்சிகளின் அம்சங்கள் :**

- சிறிய நாடுகளையும் கணசங்கங்களையும் கைப்பற்றி பேரரசுகளை உருவாக்கினர்.
- பேரரசர்கள் சக்ரவர்த்தி அல்லது ஏக்ராட் போன்ற உயர்ந்த பதவிகளை ஏற்றனர்.
- கங்கைச் சமவெளி பகுதிகளில் ஒரு மையப்படுத்தப்பட்ட பேரரசு உருவானது.
- சர்வாதிகாரமான அரசு சமூக, பொருளாதார, நிர்வாக அமைப்பை மாற்றியது.

---

# பாடம் - 5

## தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. கரிகாலன் .................................. மகனானவர்.**

அ) செங்கண்ணன் ஆ) கடுங்கோ **இ) இளஞ்சேட் சென்னி** ஈ) அதியமான்

**2. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது.**

(i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன்
(ii) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்
(iii) கஜபாகு - இலங்கை
(iv) திருவஞ்சிக்களம் - சோழர்

அ) i ஆ) ii இ) iii **ஈ) iv**

3. ................................... ராஜசூய யாகத்தை நடத்தினார்

அ) பெருநற்கிள்ளி ஆ) முதுகுடுமிப் பெருவழுதி

இ) சிமுகா ஈ) அதியமான்

4. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க

(i) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்.

(ii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்.

(iii) இக்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்.

(iv) உப்பு வியாபாரிகள் உமணர் என்றழைக்கப்பட்டனர்.

அ) (i) மற்றும் (ii) ஆ) (ii) மற்றும் (iii) இ) (i) மற்றும் (iii) ஈ) (iii) மற்றும் (iv)

5. இக்சவாகுகள் ................................... பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.

அ) ஆந்திர - கர்நாடகா ஆ) ஒடிசா இ) தக்காணப் பகுதி ஈ) பனவாசி

---

## II. குறுகிய விடை தருக :

### 1. பண்டமாற்று முறை - விளக்கம் :

- ஒரு பொருளை கொடுத்து தமக்கு தேவையான மற்றொரு பொருளை வாங்குவது.
- விலையுயர்ந்த ஆபரணக் கற்களைக் கொடுத்து மூலப் பொருட்களைப் பெற்றனர்.
- அதில் பல்வேறு பொருட்களை தயாரித்து வேறு பொருளாக பண்டமாற்று செய்தனர்.

---

### 2. மதுரைக் காஞ்சியில் இருந்து நாம் அறிவது :

- சங்க இலக்கியமான மதுரைக் காஞ்சி கடை வீதிகளைப் பற்றி கூறுகிறது.
- பகல் நேரக் கடை - நாளங்காடி, இரவு நேரக் கடை - அல்லங்காடி.
- அங்கு விற்பனையாகும் பலவகை கைவினைப் பொருட்கள் பற்றியும் பேசுகிறது.

---

### 3. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை பற்றி நாம் அறிவது :

- சங்க கால சேர அரசன் நெடுஞ்சேரலாதன் மகன் சேரல் இரும்பொறை.
- ஆடுகோட்பாட்டு சேரலாதன் என்ற பெயரில் அரியனை ஏறினார்.
- பதிற்றுப்பத்தின் ஆறாவது பத்து இவர் மீது பாடப்பட்டுள்ளது.

---

## III. சுருக்கமான விடை தருக :

### 1. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள் :

- தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.
- குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த பகுதி. முக்கியத் தொழில் வேட்டையாடுதல்.
- முல்லை - காடும் காடு சார்ந்த பகுதி. முக்கியத் தொழில் மேய்த்தல்.
- மருதம் - வயலும் வயல் சார்ந்த பகுதி. முக்கியத் தொழில் வேளாண்மை.
- நெய்தல் - கடலும் கடல் சார்ந்த பகுதி. முக்கியத் தொழில் மீன்பிடித்தல்.
- பாலை - மணலும் மணல் சார்ந்த பகுதி. முக்கியத் தொழில் கொள்ளையடித்தல்.

### 2. சோழ அரசர்களில் தலைசிறந்தவன் கரிகாலன் :

- ◈ இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலன் பற்றி பட்டினப்பாலை கூறுகிறது.
- ◈ கரிகாலன் வெண்ணிப் போரில் சேரர், பாண்டியர் மற்றும் 11 வேளிர்களை வென்றார்.
- ◈ கரிகாலன் காவிரியில் அணை கட்டினார். காடுகளை வெட்டி நாடாக்கினார்.
- ◈ குளங்கள், வாய்க்கால்கள் வெட்டி நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தித் தந்தார்.

---

### 3. கௌதமி புத்திர சதகர்னியின் சாதனைகள் :

- ◈ கௌதமிபுத்திர சதகர்னியின் வெற்றிகளைப் பற்றி நாசிக் கல்வெட்டு கூறுகிறது.
- ◈ சாக அரசர் நாகபனா, பகல்வர், யவனர்கள் ஆகியோரை வெற்றி கொண்டார்.
- ◈ நாகபனாவின் நாணயங்களைத் தன் அரச முத்திரையோடு மீண்டும் வெளியிட்டார்.
- ◈ கௌதமிபுத்திர சதகர்னி அஸ்வமேத யாகத்தை நடத்தியதாக கூறப்படுகிறது.

---

### 4. கிழார் - வேளிர் இருவருக்கும் உள்ள வேறுபாடுகள் :

| கிழார் | வேளிர் |
|---|---|
| ❖ ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் பழங்குடி இனச் சமூகங்களின் தலைவர்களே கிழார். | ❖ மலைப்பாங்கான காட்டுப் பகுதியை தங்கள் கட்டுபாட்டில் வைத்திருந்த குறுநில மன்னர்களே வேளிர். |
| ❖ ஒரு சிறிய பகுதியின் தலைவராக இருந்து, பின்னர் நாடு என்ற நிர்வாகப் பிரிவின் தலைவராக மாறியவர். | ❖ ஆநிரை கவர்தல் காரணமாக அடிக்கடி போர்கள் மூண்டன. புலவர்கள் மற்றும் கலைஞர்களை ஆதரித்தனர். |

---

## IV. விரிவான விடை தருக :

### 1. "சங்க கால அரசியல் முறையானது அரசு உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்த தலைமை உரிமையே" - இக்கூற்றுக்கு முன்வைக்கும் காரணங்கள் :

**ஆதரவாக முன்வைக்கும் காரணங்கள் :**

- ◈ சங்க காலத்தில் சமூகப் பிரிவினைகள் வெளிப்படவில்லை.
- ◈ அரசுகளின் எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாதது.
- ◈ வரி விதிப்பு இருந்ததாகச் சான்றுகள் இல்லை.
- ◈ ஒரு அரசு உருவாகத் தேவையான வேளாண் வளர்ச்சி போர்களால் நாசமாயின.

**எதிராக முன்வைக்கும் காரணங்கள் :**

- ◈ மருத நிலப் பகுதியில் சமூக வேற்றுமைகள் தோன்றி இருந்தன.
- ◈ மூவேந்தர்கள் தங்கள் நிலத்தின் மீது பற்றும் செல்வாக்கும் கொண்டிருந்தனர்.
- ◈ வணிகப் பெருவழிகள் மற்றும் துறைமுகங்களில் வரி வசூலிக்கப்பட்டது.
- ◈ தங்கள் ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்த போர்கள் மேற்கொண்டனர்.

## 2. மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பு :

- மூவேந்தர்களும் தங்கள் வலிமையை நிரூபிக்க போரிட்டுக் கொண்டனர்.
- கிழார்களையும் வேளிர்குலத் தலைவர்களையும் அடிபணியச் செய்தனர்.
- போர்புரிய வேண்டி தங்களுக்கென படை வீரர்களை அணி திரட்டினர்.
- சில போர்களில் வேளிர்குலத் தலைவர்களின் உதவியையும் நாடினர்.
- புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரித்ததோடு அரசவையிலும் அமர்த்தினர்.
- தங்களது வலிமையைப் பறைசாற்ற சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர்.
- பட்டப் பெயர்கள் - கடுங்கோ, இமயவரம்பன், வானவரம்பன், பெருவழுதி
- தங்களை வேளிர்குல தலைவர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொண்டனர்.

---

## 3. களப்பிரர் யார் என்பன குறித்து பூலாங்குறிச்சி கல்வெட்டில் அறிவன :

- களப்பிரர் காலம் என்பது சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த காலமாகும்.
- சங்க காலத்திற்கும், பல்லவர்கள் - பாண்டியர்கள் காலத்திற்கும் இடைப்பட்ட காலம்.
- களப்பிரர்கள் மூவேந்தர்களையும் வீழ்த்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர்.
- களப்பிரர்கள் தமிழகத்தில் தோராயமாக, பொ.ஆ. 300 - 600 வரை ஆட்சி செய்தனர்.
- பூலாங்குறிச்சிக் கல்வெட்டு சிவகங்கை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு உள்ளது.
- அவர்களது குடும்பம், வம்சாவளி பற்றிய குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை.
- களப்பிரர்கள் காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இயற்றப்பட்டன.

---

## 4. சங்க காலம், சங்க காலத்தைத் தொடர்ந்து உடனடியாக வந்த காலத்தைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் தொலைதூர வணிகம் :

### வணிகர்கள் :

- வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் உள்ளன.
- சாத்து என்பது இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பது.
- உப்பு வணிகத்தில் ஈடுபட்டவர்கள் உமணர் என்று அழைக்கப்பட்டனர்.
- உப்பு வணிகர்கள் மாட்டு வண்டிகளில் குடும்பத்தோடு வணிகம் செய்தனர்.

### தொலைதூர வணிகம் :

- வணிகத்தில் பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்தில் இருந்தது.
- ரோமானியத் தங்க, வெள்ளி நாணயங்கள் பரிமாற்றத்திற்கு உதவின.
- ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன.
- ரோமானிய நாணயங்கள் கோயம்புத்தூரைச் சுற்றிய பகுதிகளில் அதிகம் உள்ளன.

---

# பாடம் - 6

## மௌரியருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பும் சமூகமும்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. **அலெக்ஸாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர் ..........................**

   அ) செலியுகஸ் நிகேடர்  ஆ) அன்டிகோனஸ்
   இ) அண்டியோகஸ்  ஈ) டெமெட்ரியஸ்

2. **செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிபுத்திரத்துக்கு ..................... தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.**

   அ) ரோமானிய  ஆ) கிரேக்க  இ) சீன  ஈ) பிரிட்டிஷ்

3. **வழக்கமான தூதர்கள் மற்றும் கடிதப் பரிமாற்றம் .........................**

   அ) இந்தியாவிலிருந்து மேற்குக்கான வழக்கமான வணிகத்தைப் பாதித்தது.
   ஆ) இந்தியாவிலிருந்து மேற்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.
   இ) இந்தியாவிலிருந்து கிழக்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.
   ஈ) மேற்கூறிய எதுவுமில்லை.

4. **இந்தோ - கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர்.**

   அ) யூதிடெமஸ்  ஆ) டெமெட்ரியஸ்  இ) மினாண்டர்  ஈ) ஆன்டியால்ஸைடஸ்

5. **குஷாண நாணயங்கள் ................. நாணயங்களைவிட உயர்ந்த தரத்தில் இருந்தன.**

   அ) ரோமானிய  ஆ) கிரேக்க  இ) குப்த  ஈ) சாதவாகன

6. **இந்தோ - கிரேக்கக் கலை மற்றும் சிற்பப் பாணி ................... என்று குறிப்பிடப்பட்டது.**

   அ) மதுரா கலை  ஆ) காந்தாரக் கலை  இ) பாக் கலை  ஈ) பாலா கலை

7. **கீழ்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?**

   அ) புத்தசரிதம் - அஷ்வகோஷர்
   ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் - மெகஸ்தனிஸ்
   இ) அர்த்தசாஸ்திரம் - கௌடில்யர்
   ஈ) காமசூத்திரம் - வாத்சாயனர்

8. **சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர் ......................**

   அ) மொக  ஆ) ருத்ரதாமன்  இ) அஸிஸ்  ஈ) யசோவர்மன்

9. **ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்.**

   (i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்தியத் தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.

   (ii) அரேபியக் கடலில் வீசும் பருவக் காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.

   அ) (i) சரி  ஆ) (ii) சரி  இ) (i) (ii) இரண்டுமே சரி  ஈ) (i) (ii) இரண்டுமே தவறு.

10. ...................... பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அ) அரிக்கமேடு ஆ) ஆதிச்சநல்லூர் இ) புகார் ஈ) பல்லாவரம்.

---

## II. குறுகிய விடை தருக :

### 1. பட்டியல் தயாரித்தல் :

**இந்தியாவில் இருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் :**

- மிளகு, முத்து, தந்தம், பட்டுத் துணிகள், நீலக்கல், கோமேதகம், வைரம், ஆமைஓடு, விளாமிச்சை வேர்த் தைலம், தாளிசபத்திரி, பருத்தித் துணிகள் ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன.

**ரோமில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் :**

- நாணயங்கள், தாமிரம், தகரம், ஈயம், மதுவகைகள், புஷ்பராகக் கல், அஞ்சனம், பவழம், கச்சா கண்ணாடி ஆகியன இறக்குமதியாயின.

---

### 2. பெருகிவரும் வணிகத்திற்கும் வியாபாரத்துக்குமான வணிகர்களின் பங்களிப்பு :

- வெளிநாடுகளோடு தரைவழி மற்றும் கடல்வழி வணிகத்தில் ஈடுபட்டனர்.
- வணிகர்கள் எண்ணிக்கை பெருகி சமுதாயத்தில் முக்கியமானோர் ஆயினர்.
- ஒரு பொருளை மட்டுமே வணிகம் செய்யும் தனித்தனி அங்காடிகள் இயங்கின.

---

## III. சுருக்கமான விடை தருக :

### 1. "முற்பட்ட கால ரோமானிய நாணயங்கள் கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர் மாவட்டங்களில் அதிகம் கிடைக்கின்றன" - காரணம் :

- முற்கால ரோமானியர்கள் குமரி முனையைச் சுற்றிக் கொண்டு செல்லவில்லை.
- மேற்குக் கடற்கரை துறைமுகங்களே ரோமானியர்களின் வணிக மையமாக இருந்தது.
- பாலக்காடு கணவாய் வழியாக கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர் வந்தடைந்தனர்.
- இப்பகுதிகள் கோமேதகம், இரும்பு எBகு ஆகியவற்றின் உற்பத்தி மையங்களாகும்.

---

### 2. "இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது" - விளக்கம் :

- மேற்குக் கடற்கரையில் இருந்த முசிறி துறைமுகம் பரபரப்பான வணிக மையமாகும்.
- அரிசியை ஏற்றி வந்த படகுகள் திரும்பிச் செல்கையில் மீன்களை ஏற்றிச் சென்றன.
- கருமிளகு மூட்டைகள் கப்பலில் வந்த தங்கத்திற்கு பண்டமாற்றாக அமைந்தன.
- முசிறி இரண்டு வணிகச் சுற்றுகளின் மையம் என சங்க பாடல்கள் கூறுகின்றன.

---

### 3. பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவம் :

- பணத்தைக் கொண்டு பொருட்களை வாங்குவதும் விற்பதும் சுலபமாக இருந்தது.
- வரியை பணமாகச் செலுத்துவது மக்களுக்கும் வணிகர்களுக்கும் எளிதாக இருந்தது.
- பணம் என்பது விலை உயர்ந்த தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களாக இருந்தன.
- நாணயங்களின் தன்மை, அளவு மற்றும் தரத்திற்கு ஏற்ப பொருட்கள் விற்கப்பட்டன.

## IV. விரிவான விடை தருக :

### 1. மத்தியத் தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலெழுந்த விதம் :

- பொ.ஆ. தொடக்கத்தில் உலக வரலாற்றில் இரு முக்கிய வளர்ச்சிகள் ஏற்பட்டன.
- இரு வளர்ச்சிகள் ஐரோப்பிய - இந்திய வணிகத்தின் வரையறைகளை மாற்றியது.
- கிரேக்க அரசுகளை அகற்றிவிட்டு ரோமானிய அரசு பெருஞ்சக்தியாக மேலழுந்தது.
- ரோமானியக் குடியரசு பேரரசர் அகஸ்டஸின் கீழ் ஒரு மாபெரும் பேரரசாக மாறியது.
- ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் ரோமானிய அரசு பல வெற்றிகளைப் பெற்றது.
- ரோமானிய அரசு பல வெற்றிகள் மூலம் மிகப் பெரும் செல்வங்களைக் குவித்திருந்தது.
- ரோம் செல்வ செழிப்பு மிக்க நகரமாகவும், உலகின் பெருஞ்சக்தியாகவும் மேலழுந்தது.
- தமிழ்நாட்டின் நறுமணப் பொருள்கள், துணி வகைகளின் தேவை அதிகரித்தது.

---

### 2. பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்கள் :

- தமிழ் நிலப்பகுதி அரசியல் ரீதியாக பல சிற்றரசுகளாகத் துண்டுபட்டு இருந்தது.
- பொ.ஆ. முதல் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் மூவேந்தர்கள் அரசாட்சி நடத்தினர்.
- வஞ்சியைத் தலைநகராகக் கொன்டு சேரர்கள் ஆட்சி நடத்தினர்.
- உறையூரைத் தலைநகராகக் கொன்டு சோழர்கள் ஆட்சி நடத்தினர்.
- மதுரையைத் தலைநகராகக் கொன்டு பாண்டியர்கள் ஆட்சி நடத்தினர்.
- மூவேந்தர்களைத் தவிர சிறிய பகுதிகளை ஆட்சி செய்த வேளிர்கள் இருந்தனர்.
- மௌரிய அரசர்கள் தமிழ் மூவேந்தர்களை குறித்து அறிந்து வைத்திருந்தனர்.
- அசோகரின் 2-வது பாறைக் கல்வெட்டாணை மூவேந்தர்கள் பற்றி குறிப்பிடுகிறது.

---

# பாடம் - 7

## குப்தர்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. குப்தர் காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளின் எது நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

அ) இலக்கியச் சான்றுகள் ஆ) கல்வெட்டுச் சான்றுகள்

இ) நாணயச் சான்றுகள் **ஈ) கதைகள், புராணங்கள்**

**2. பொருத்துக.**

| இலக்கியப் படைப்பு | | எழுதியவர் |
|---|---|---|
| (i) தன்வந்திரி | - | 1. சூரிய சித்தாந்தா |
| (ii) வராஹமிகிரா | - | 2. அமரகோஷா |
| (iii) ஆரியபட்டர் | - | 3. பிருஹத்சம்ஹிதா |
| (iv) அமரசிம்மா | - | 4. ஆயுர்வேதா |

**அ) 4, 3, 1, 2** ஆ) 4, 1, 2, 3 இ) 4, 2, 1, 3 ஈ) 4, 3, 2, 1

3. **.................... க்கு கவிராஜா என்று பட்டம் அளிக்கப்பட்டது.**

அ) முதலாம் சந்திர குப்தர் ஆ) சமுத்திர குப்தர்

இ) இரண்டாம் சந்திர குப்தர் ஈ) ஸ்ரீகுப்தர்

4. **...................... என்ற சீனப் பயணி பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.**

அ) இட்சிங் ஆ) யுவான்-சுவாங் இ) பாஹியான் ஈ) வாங்-யுவான்-சீ

5. **கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரை குகைக் கோயில் இல்லை?**

(i) உதயகிரி குகை (ஒடிசா)

(ii) அஜந்தா- எல்லோரா குகை (மகாராஷ்டிரா)

(iii) எலிபண்டா குகை (மகாராஷ்டிரா)

(iv) பாக் (மத்தியப் பிரதேசம்)

அ) i ஆ) ii இ) iii ஈ) iv

6. **தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் ..........................**

அ) திங்கநாகர் ஆ) வசுபந்து இ) சந்திரகாமியா ஈ) வராகமிகிரர்

---

## II. குறுகிய விடை தருக :

### 1. ஸ்கந்த குப்தர் வரையிலான குப்த அரசர்களின் பட்டியல் காலவரிசைப்படி :

- 1. ஸ்ரீகுப்தர் 2. கடோத்கஜர் 3. முதலாம் சந்திர குப்தர்
- 4. சமுத்திர குப்தர் 5. இரண்டாம் சந்திர குப்தர் 6. முதலாம் குமார குப்தர்
- 7. ஸ்கந்த குப்தர்

### 2. ஹூணர் குறித்து அறிவது :

- ஹூணர்கள் காஸ்பியன் கடல் பகுதியில் வாழ்ந்த பழங்குடி இனத்தவர்.
- ஹூணர்கள் ரோமபுரிப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தவர்கள்.
- மத்திய ஆசியாவில் இருந்து இந்தியா நோக்கி படையெடுத்து வந்தனர்.

---

### 3. மதுரா குறித்து பாஹியான் குறிப்பிடுவன :

- மதுராவில் மக்கள்தொகை அதிகம். அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.
- அரசரது நிலத்தில் பயிரிடுவோர் தானியத்தில் ஒரு பகுதியை தரவேண்டும்.
- குற்றவாளிகளுக்கு மிதமாகவோ கடுமையாகவோ அபராதம் விதிக்கப்பட்டது.

---

### 4. அலகாபாத் தூண் கல்வெட்டு குறிப்பு :

- சமுத்திர குப்தரின் ஆட்சி, படையெடுப்புகள், சாதனைகள் பற்றி கூறுகிறது.
- ஹரிசேனர் பொறித்த இக்கல்வெட்டில் 33 வரிகள் காணப்படுகிறது.
- நாகிரி வரிவடிவத்தில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு உள்ளது.

---

## III. சுருக்கமான விடை தருக :

**1. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகள் :**

- குப்தப் பேரரசு தேசம் அல்லது புக்தி என்ற மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன.
- மாநிலங்கள் விஷ்யா என்ற பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தன.
- மாவட்டத்தின் கீழ் விதி, பூமி, பதகா, பீடா போன்ற நிர்வாக அலகுகள் இருந்தன.
- கிராம மட்டத்தில் கிராமிகா, கிராம் அத்யக்ஷா போன்ற அதிகாரிகள் இருந்தனர்.

---

## IV. விரிவான விடை தருக :

**1. "குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்" :**

- குப்த பேரரசு இந்தயாவில் ஒரு மாபெரும் சக்தியாக வளர்ச்சி அடைந்தது.
- துணைக் கண்டத்தின் பெரிய பகுதியை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்தது.
- வலிமையான மைய அரசும் அதன் ஆதிக்கத்தின் கீழ் பல அரசுகளும் இருந்தன.
- செயல்திறன் மிக்க வணிகக் குழுகளால் குப்தப் பொருளாதாரம் எழுச்சி கண்டது.
- கலை, அறிவியல், கல்வி, இலக்கியம் ஆகியவை சிறப்பாக வளர்ச்சி பெற்றது.
- சமஸ்கிருத மொழியில் பல பெரிய நூல்களும் படைப்புகளும் தோன்றின.
- கட்டிடக்கலை, சிற்பம், நுண்கலை ஆகியன நல்ல பண்பாட்டு முதிர்ச்சி கண்டது.
- மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தனர். உயர் குடியினர் வாழ்க்கைமுறை உச்சத்தில் இருந்தது.

---

# பாடம் - 8

## ஹர்ஷர் மற்றும் பிரதேச முடியரசுகளின் எழுச்சி

## I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. பிரபாகர வர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை ............................ என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.**

அ) கிரகவர்மன்　ஆ) தேவகுப்தர்　இ) சசாங்கன்　ஈ) புஷ்யபுத்திரர்

**2. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை ...................... அறிவுரையின்படி ஏற்றுக் கொண்டார்.**

அ) கிரகவர்மன்　ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர்

இ) பிரபாகரவர்த்தனர்　ஈ) போனி

**3. ................. என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.**

அ) குந்தலா　ஆ) பானு　இ) அவந்தி　ஈ) சர்வாகதா

**4. கீழ்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?**

அ) ஹர்ஷசரிதம்　ஆ) பிரியதர்சிகா　இ) அர்த்தசாஸ்திரா　ஈ) விக்ரம ஊர்வசியம்

5. **கீழ்கண்டவற்றுள் தவறானது எது?**
   அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.
   ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.
   இ) மகிபாலர் கீதங்கள் வங்காள கிராமப் பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன.
   ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

---

## II. குறுகிய விடை தருக :

### 1. ஹர்ஷப் பேரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் :

1. மதுபனி செப்புப் பட்டயம்
2. பன்ஸ்கெரா செப்புப் பட்டயம்.
3. சோன்பட் செப்பு முத்திரை
4. நாளந்தா களிமண் முத்திரை.

---

# பாடம் - 9

## தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி

## I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. **கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக இணைக்கப்படவில்லை?**
   அ) மூன்றாம் கோவிந்தன் - வாதாபி ஆ) ரவிகீர்த்தி - இரண்டாம் புலிகேசி
   இ) விஷயம் - ராஷ்ட்டிரகூடர் ஈ) நம்மாழ்வார் - குருகூர்
2. **தேர்ந்தெடுத்துப் பொருத்துக.**
   (i) சிம்ம விஷ்ணு - 1. சாளுக்கிய அரசன்
   (ii) முதலாம் ஜெயசிம்மன் - 2. பல்லவ அரசன்
   (iii) முதலாம் ஆதித்தன் - 3. கப்பல் தளம்
   (iv) மாமல்லபுரம் - 4. சோழ அரசன்
   அ) 4, 3, 1, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 2, 1, 4, 3 ஈ) 4, 3, 2, 1
3. **காம்போஜம் என்பது நவீன ........................**
   அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா
4. **........................ சமணர்களால் நிறுவப்பட்ட ஒரு சமய மையம்.**
   அ) சரவண பெலகொலா ஆ) மதுரை இ) காஞ்சி ஈ) கழுகுமலை
5. **அரச குடும்பம் தொடர்பான சடங்குகளை நடத்துவதற்காகச் சாளுக்கியரால் கட்டப்பட்ட கோயில்கள் எங்கு உள்ளது?**
   அ) ஐஹொல் ஆ) வாதாபி இ) மேகுடி ஈ) பட்டாடக்கல்

6. **அயல்நாட்டு வணிகர்கள் .................................... என்று அறியப்பட்டனர்.**

அ) பட்டணசாமி ஆ) நானாதேசி இ) விதேசி ஈ) தேசி

7. **ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு ....................................**

அ) அத்வைதம் ஆ) விசிஷ்டாத்வைதம் இ) சைவசித்தாந்தம் ஈ) வேதாந்தம்

---

## II. குறுகிய விடை தருக :

### 1. திருபுறம்பியம் போரைப் பற்றி நாம் அறிவது :

- திருப்புறம்பியம் போர் பல்லவர்கள் - பாண்டியர்கள் இடையே நடைபெற்றது.
- சோழர்கள் மற்றும் மேலைக் கங்கர் ஆதரவோடு நந்தி வர்மன் போரிட்டான்.
- திருபுறம்பியம் / ஸ்ரீபிரம்பியம் போரில் பாண்டியர்கள் தோல்வியுற்றனர்.

---

### 2. அனைவரையும் உள்ளடக்கிய மதமாக வைணவத்தை மாற்றிய ராமானுஜரின் பங்களிப்பு :

- வைணவத்தில் பிராமணர் அல்லாதோரையும் இணைத்துக் கொண்டார்.
- அனைத்து பிரிவு மக்களிடமும் வைணவ பக்தி கோட்பாட்டை பரப்பினார்.
- ராமானுஜர் ஒரு சிறந்த ஆசிரியர், சீர்திருத்தவாதி என போற்றப்பட்டார்.

---

## III. சுருக்கமான விடை தருக :

### 1. பல்லவர்களின் நிர்வாகப் பிரிவுகள் :

- பல்லவர்கள் காலத்தில் அரச பதவி தெய்வீக உரிமையாகக் கருதப்பட்டது.
- அரசருக்கு உதவியாக மந்திரி மண்டல என்னும் அமைச்சர் குழு இருந்தது.
- மாநில ஆளுநர்களுக்கு மாவட்ட அதிகாரிகள் ஆலோசனைகளை வழங்கினர்.
- கிராமப்புறங்களில் மக்கள் பங்குபெறும் மன்றங்கள் சிறப்பாகச் செயல்பட்டன.

---

### 2. புகழ்பெற்ற சைவ மூவர்கள் :

- புகழ்பெற்ற சைவ மூவர்கள் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்.
- இம்மூவர் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளில் தொகுக்கப்பட்டுள்ளன.
- இம்மூவரும் பாடிய முதல் ஏழு திருமுறைகளே தேவாரம் எனப்படுகிறது.
- முதல் 3 - சம்பந்தர்" 4 முதல் 6 வரை - நாவுக்கரசர்" 7 வது - சுந்தரர் பாடியுள்ளனர்.

---

### 3. தமிழகத்தில் வைணவத்தை பரவலாக்கியதில் ஆழ்வார்களின் பங்கு :

- பாடல்கள், சமயத் தொண்டுகள் மூலம் ஆழ்வார்கள் வைணவத்தை வளர்த்தனர்.
- கண்ணனின் குழந்தைப் பருவமே பெரியாழ்வார் பாடல்களின் கருவாக இருந்தது.
- ஆண்டாளின் பாடல்கள் கண்ணனின் மீது கொண்டிருந்த காதலை காட்டுகிறது.
- ஆழ்வார்களில் சிறந்தவரான நம்மாழ்வார் திருவாய்மொழி எழுதியுள்ளார்.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. பல்லவ அரசர்கள் வெளியிட்ட நிலக்கொடை ஆணைகளின் முக்கியத்துவம் :

- அதிகாரிகள் வருவாய் மானியமும், பிராமணர்கள் நில மானியமும் பெற்றனர்.
- 'பிரம்மதேய கிராமங்கள்' பிராமணர்களுக்கு கொடையாக வழங்கப்பட்டன.
- வரி விலக்கு அளிக்கப்பட்டதால் பிரம்மதேய கிராமங்கள் செழிப்பாக இருந்தன.
- 'தேவதான கிராமங்கள்' கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்டன.
- தேவதான கிராமங்களில் கிடைத்த வருவாயை கோயில் நிர்வாகிகள் பெற்றனர்.
- அரசருக்கு சொந்தமான நிலங்கள் குடியானவர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டன.
- குத்தகைக்கான கால அளவைப் பொறுத்து கிராமங்களின் தகுதி நிலைகள் மாறுபடும்.

---

### 2. பல்லவரின் கப்பல் சார்ந்த செயல்பாடுகள் :

- பல்லவர்கள் காலத்தில் மாமல்லபுரம் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்கியது.
- தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு கடல் கடந்த வணிகத்தில் ஈடுபட்டனர்.
- ஏற்றுமதி - நறுமணப் பொருள்கள், பருத்தி ஆடைகள், விலை உயர்ந்த கற்கள் ஆகியன.
- ஏற்றுமதியான நாடுகள் - இலங்கை, சீனா, ஜாவா, சுமத்ரா, கம்போடியா, மியான்மர்.
- மேலை நாடுகளுடனான வணிகம் நேரடியாக இல்லாமல் அரேபியா வழியாக அமைந்தது.
- மேற்கு கடற்கரையில் வணிகத்தில் அராபிய வணிகர்களே முன்னிலை வகித்தனர்.
- இந்திய வணிகர்கள் சரக்குகளை அயல்நாடுகளுக்கு சுமந்து சென்ற நிலை மாறியது.

---

### 3. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகள் :

- மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலை பல்லவ அரசன் ராஜசிம்மன் எழுப்பினார்.
- இந்த கோயில் தென் இந்தியக் கட்டுமானக் கோயில்களில் முதன்மையானது.
- பல்லவர்களின் அடையாளமாக உள்ள இக்கோயிலில் மூன்று கருவறைகள் உள்ளன.
- சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் முக்கியமான கருவறைகள் அமைக்கப்பட்டு உள்ளன.
- விஷ்ணு கருவறையின் வெளிச் சுவரிலும் சுற்றுச் சுவரிலும் தொடர் சிற்பங்கள் உள்ளன.
- இக்கோயில் பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்டுள்ளது.
- ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் இக்கோயில்களின் சிறப்பம்சமாகும்.

---

# பாடம் - 11

## பிற்காலச் சோழரும் பாண்டியரும்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. .................... கடல்வழிப் படையெடுப்புகள் ஸ்ரீவிஜயா அரசு வரை விரிவடைந்திருந்தன.

அ) மூன்றாம் குலோத்துங்கன்  ஆ) முதலாம் இராஜேந்திரன்

இ) முதலாம் இராஜராஜன்  ஈ) பராந்தகன்

2. **.............. படுகையில் இருந்த சோழ அரசின் மையப்பகுதி சோழ மண்டலம் எனப்படுகிறது.**

   அ) வைகை   ஆ) காவிரி   இ) கிருஷ்ணா   ஈ) கோதாவரி

3. **முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திரனும் இணைந்து ............... ஆண்டுகள் சோழ அரசை ஆட்சி செய்தார்கள்.**

   அ) 3   ஆ) 2   இ) 5   ஈ) 4

4. **..................... ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.**

   அ) 28 கி.கி   ஆ) 27 கி.கி   இ) 32 கி.கி   ஈ) 72 கி.கி

5. **கெடா ..................... இல் உள்ளது.**

   அ) மலேசியா   ஆ) சிங்கப்பூர்   இ) தாய்லாந்து   ஈ) கம்போடியா

6. **முதலாம் இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் .................. என்று அழைக்கப்பட்ட ஒரு குழுவால் நிர்வகிக்கப்பட்டது.**

   அ) நாட்டார்   ஆ) மாநகரம்   இ) நகரத்தார்   ஈ) ஊரார்

7. **பொருத்துக.**

   (1) படை முகாம் - படைவீடு

   (2) புறக்காவல் படைகள் - தண்டநாயகம்

   (3) தலைவர் - நிலைப்படை

   (4) படைத்தளபதி - படைமுதலி

   அ) 1, 3, 4, 2   ஆ) 4, 2, 1, 3   இ) 2, 1, 3, 4   ஈ) 2, 3, 1, 4,

8. **............................ இல் பெற்ற வெற்றியின் நினைவாக முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தைக் கட்டினர்.**

   அ) இலங்கை   ஆ) வட இந்தியா   இ) கேரளம்   ஈ) கர்நாடகா

9. **....................... பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.**

   அ) மதுரை   ஆ) காயல்பட்டினம்   இ) கொற்கை   ஈ) புகார்

10. **பொ.ஆ. 800 ஐச் சேர்ந்த மானூர் கல்வெட்டு ......................... நிர்வாகம் குறித்த செய்திகளைத் தருகின்றது.**

    அ) மத்திய அரசு   ஆ) கிராமம்   இ) படை   ஈ) மாகாணம்

11. **வறட்சிப் பகுதியான இராமநாதபுரத்தில் பாண்டிய அரசர்கள் .................. ஐக் கட்டினார்கள்.**

    அ) அகழிகள்   ஆ) மதகுகள்   இ) அணைகள்   ஈ) ஏரிகள்

---

## II. குறுகிய விடை தருக :

### 1. சோழர் காலத்து இலக்கிய வடிவ வரலாற்று நூல்கள் :

- ஜெயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப் பரணி - கலிங்கப் போர் பற்றி கூறுகிறது.
- ஒட்டகூத்தர் இயற்றிய மூவருலா, குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ்.
- மூவருலா - மூன்று சோழ அரசர்களின் வரலாற்றை தருகிறது.

### 2. சோழ மண்டலம், மும்முடிச் சோழ மண்டலம் என அழைக்கப்படக் காரணம் :

- தொண்டை நாடு, பாண்டி நாடு, சேர நாடு, கங்கைவடி பகுதிகளை கைப்பற்றினர்.
- சோழ நாடு, சேர நாடு, பாண்டிய நாடு என மூன்றையும் ஒன்றாக ஆட்சி செய்தனர்.
- வடகிழக்கு இலங்கையைக் கைப்பற்றி மும்முடிச் சோழ மண்டலம் என பெயரிட்டனர்.

---

### 3. முதலாம் இராஜேந்திரனுக்கான பட்டங்கள் :

- முடிகொண்ட சோழன் - பாண்டியர்களை முறியடித்ததால் கிடைத்த பட்டம்.
- கங்கை கொண்டான் - வட இந்திய வெற்றியால் கிடைத்த பட்டம்.
- கடாரம் கொண்டான் - ஸ்ரீவிஜயா, கடாரம் வெற்றியால் கிடைத்த பட்டம்.

---

### 4. நிலத்தைக் கணக்கிடுவதற்கான வெவ்வேறு அலகுகள் :

- சோழர்கள் நிலங்களை முறையாக அளவீடு செய்து வரி விதித்தனர்.
- நிலத்தை கணக்கிடும் அலகுகள் - குழி, மா, வெளி, பட்டி, பாடகம்.
- நில அளவீடு செய்யும் பணியாளர்களை "நாடு வகை செய்கிற" என்றழைத்தனர்.

---

### 5. சோழர் காலத்தில் அரசர்கள், அரசிகள், கடவுளரின் பெயர்கள் சூட்டப்பட்ட கால்வாய்கள் :

- உத்தமச் சோழன் வாய்க்கால் - அரசர் பெயரால் அமைந்தது.
- பஞ்சவன் மாதேவி வாய்க்கால் - அரசி பெயரால் அமைந்தது.
- கணவதி வாய்க்கால் - கடவுளின் பெயரால் அமைந்தது.

---

### 6. தமிழ் சங்கம் குறிப்பு :

- இறையனார் அகப்பொருள் - சங்கம் என்பதன் பொருள் கலைக்கழகம்.
- திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் - சங்கம் என்பது கலைக்கழகம்.
- பல்லவர்களுக்கு முந்தைய இலக்கியங்களில் சங்கம் என்பதன் பொருள் வேறு.

---

### 7. பாண்டிய அரசின் மீதான மாலிக் காபூரின் படையெடுப்பின் விளைவுகள் :

- மதுரையில் தில்லி சுல்தானியத்திற்கு கட்டுப்பட்ட ஓர் அரசு உருவானது.
- அரச மரபினர் பாண்டிய நாட்டை தனித்தனி அரசுகளாக துண்டாடினர்.
- மாலிக்காபூர் கோயில்களை இடித்து பெரும் செல்வத்தை எடுத்துச் சென்றார்.

---

## III. சுருக்கமான விடை தருக :

### 1. இராஜராஜ சோழனின் கடல்வழிப் படையெடுப்புகள் :

- கடல்வழிப் படையெடுப்பில் மேற்குக் கடற்கரை மற்றும் இலங்கையை வென்றார்.
- இலங்கையின் வடகிழக்குப் பகுதியை மும்முடிச் சோழ மண்டலமாக அறிவித்தார்.
- இறுதியாக இந்தியப் பெருங்கடலில் இருந்த மாலத் தீவுகளைக் கைப்பற்றினார்.
- முதலாம் இராஜராஜ சோழன் கடல் கடந்த பேரரசு உருவாக அடித்தளமிட்டார்.

### 2. இராஜேந்திர சோழன் கடாரம் கொண்டான் என அழைக்கப்படக் காரணம் :

- ◈ தென்கிழக்கு ஆசியாவில் இருந்த ஸ்ரீவிஜயா, கடாரம் பகுதிகளை தாக்கினார்.
- ◈ வணிகத்தில் சிறந்து விளங்கிய ஸ்ரீவிஜயாவை (தெற்கு சுமத்ரா) கைப்பற்றினார்.
- ◈ குறுநில மன்னர்கள் ஆட்சியின் கீழ் இருந்த கெடாவை (கடாரம்) கைப்பற்றினார்.
- ◈ இந்த கடல் கடந்த படையெடுப்பால் கடாரம் கொண்டான் என்ற பட்டம் பெற்றார்.

---

### 3. சோழர் காலத்தில் இருந்த வணிகக் குழுக்களின் பங்களிப்பு :

- ◈ அஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார் என்ற இரு வணிகக் குழுக்கள் இருந்தன.
- ◈ அஞ்சுவண்ணத்தார் குழு - மேற்கு ஆசியாவைச் சேர்ந்த கடல்வழி வணிகர்கள்.
- ◈ மணிக்கிராமத்தார் குழு - நகரங்களில் வசித்த உள்நாட்டு வணிகர்கள்.
- ◈ பிற வணிகக் குழுக்கள் - ஐநூற்றுவர், திசை ஆயிரத்து ஐநூற்றுவர், வளஞ்சியர்.

---

### 4. சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் :

- ◈ நிலங்களை வகைப்படுத்தி, அளவீடு செய்தனர். வரிகளை பொருளாக வசூலித்தனர்.
- ◈ இறை, காணிகடன், இறைகட்டின காணிகடன், கடமை வரி ஆகியன வசூலித்தனர்.
- ◈ குத்தகைக்கு வேளாண்மை செய்தவர்களிடம் குடிமை வரி வசூலித்தனர்.
- ◈ அரசர்களும் உள்ளூர் தலைவர்களும் 'ஓப்படி' என்ற வரியை வசூலித்தனர்.

---

### 5. சோழர் காலச் சமூகத்தின் படிநிலை :

- ◈ முதல் படிநிலை - பிரம்மதேய குடியிருப்புகளில் வசித்த நில உடமையாளர்கள்.
- ◈ 2 வது படிநிலை - வேளாண் கிராமங்களைச் சேர்ந்த நில உடமையாளர்கள்.
- ◈ 3 வது படிநிலை - சொந்தமாக நிலமில்லாத 'உழுகுடி' என்ற குத்தகைதாரர்கள்.
- ◈ சமூகத்தின் அடிமட்டத்தில் உழைப்பாளிகளும் அடிமைகளும் இருந்தார்கள்.

---

### 6. சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்கள் :

- ◈ முதலாம் இராஜேந்திரன் எண்ணாயிரத்தில் வேதக்கல்லூரி ஒன்றை நிறுவினார்.
- ◈ 1048-இல் திருபுவனியில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரியை தொடங்கினார்கள்.
- ◈ 1061-இல் திருமுக்கூடலில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரியை தொடங்கினார்கள்.
- ◈ வேதங்கள், தத்துவங்கள், சமஸ்கிருத இலக்கணம், ஆகியன கற்பிக்கப்பட்டன.

---

### 7. தொடக்க காலப் பாண்டியரால் கட்டப்பட்ட குடைவரைக் கோயில்கள் :

- ◈ தமிழ்நாட்டில் பல குடைவரைக் கோயில்களை பாண்டியர்கள் கட்டியுள்ளனர்.
- ◈ கழுகுமலை, ஆனைமலை, சித்தன்னவாசல் ஆகிய குடைவரைக் கோயில்கள்.
- ◈ பிள்ளையார்பட்டி, திருமயம், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் கட்டியுள்ளனர்.
- ◈ குன்றக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள குடைவரைக் கோயில்கள்.

### 8. பாண்டிய அரசு குறித்து வெளிநாட்டு பயண வரலாற்று ஆசிரியர்களின் குறிப்பு :

- பாண்டிய அரசு குறித்து வாசாஃப் மற்றும் மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளனர்.
- பாண்டிய அரசர்கள் குதிரைகளில் அதிக முதலீடு செய்தனர் என்று கூறியுள்ளனர்.
- காயல் துறைமுகம் முழுவதும் அரேபிய, சீன கப்பல்கள் நிறைந்திருந்தது என்றார்.
- நேர்மையான நிர்வாகம் செய்தனர். அரசர்கள் பலதார மணம் செய்து கொண்டனர்.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன, விவசாய நிர்வாகத் திட்டங்கள் அதிக வருமானத்துக்கு வழிவகுத்தன :

- சோழ நாட்டிற்கு வேளாண்மை மூலமே அதிக வருவானம் கிடைத்தது.
- சோழர்கள் நீர் ஆதாரங்களை நிர்வகிப்பதில் தனிக் கவனம் செலுத்தினர்.
- குளம், கிணறு, கால்வாய் போன்ற நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினர்.
- வடி என்பது வடக்கு தெற்காக நீரை வெளியேற்றும் வடிகாலாக அமைந்தது.
- வாய்க்கால் என்பது கிழக்கு மேற்காக நீரைக் கொண்டு வருவதாக அமைந்தது.
- விளை நிலத்திற்கு வாய்க்கால் வழியாக வரும் நீர் வடிக்கு திருப்பப்பட்டன.
- வடிக்கு திருப்பப்பட்ட நீர் பின்னர் மற்றொரு வாய்க்காலுக்கு திருப்பப்பட்டன.
- 'புறவுவரித் திணைக்களம்' என்ற துறை நில வருவாய் நிர்வாகத்தை கவனித்தது.

---

### 2. சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகள் :

- தஞ்சை பெரிய கோயிலை முதலாம் இராஜராஜ சோழன் கட்டினார்.
- கருவறை மீதுள்ள விமானம் 80 டன் எடை கொண்ட ஒரே கல்லால் ஆனது.
- இக்கோயிலில் லட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரிசுவரர், பிச்சாடனர் சிலைகள் உள்ளன.
- கங்கை கொண்ட சோழபுரம் கோயிலை முதலாம் இராஜேந்திர சோழன் கட்டினார்.
- இக்கோயிலில் துர்கா, விஷ்ணு, அர்த்தநாரிசுவரர், சூரியன் சிலைகள் உள்ளன.
- தாராசுரம் கோயிலை இரண்டாம் இராஜராஜ சோழன் கட்டினார்.
- இக்கோயிலில் பெரிய புராண நிகழ்வுகள் சிற்பங்களாக செதுக்கப்பட்டு உள்ளன.
- தாராசுரம் கோயில் சோழர் காலக் கட்டுமானக் கலைக்கு சான்றாக உள்ளது.

---

### 3. கோயில் - ஒரு சமூக நிறுவனம் :

- கோயில்கள் சமூகத் திருவிழாக்கள் நடைபெறும் ஒரு களமாக மாறியது.
- அரசியல், சமூகம், பண்பாட்டு மையங்களாகக் கோயில்கள் விளங்கின.
- கோயில்களில் இசை, ஓவியம், நடனம், நாடகம், கலைகள் வளர்ச்சி பெற்றன.
- தஞ்சை பெரிய கோயிலில் சித்திரைத் திருவிழாவை கொண்டாடி மகிழ்ந்தனர்.
- மேலும் கார்த்திகை விழா, ஐப்பசி விழா ஆகியவற்றையும் கொண்டாடினார்கள்.

- கோயில்களில் வழிபாட்டுப் பாடல்கள் வாய்மொழிக் கல்வியை வளர்த்தன.
- குடக் கூத்து, சாக்கைக் கூத்து போன்ற மரபு நடனங்கள் வளர்ச்சி பெற்றன.
- கோயில்கள் நன்கொடைகளை பெற்றன. வங்கிகள் போன்று கடன்களை வழங்கின.

---

## 4. பாண்டியர் ஆட்சியில் வணிகத்திலும் வர்த்தகத்திலும் ஏற்பட்ட வளர்ச்சி :

- வெளிநாட்டுப் பயணிகளான மார்க்கோபோலோ, வாசாஃப் இந்தியாவிற்கு வந்தனர்.
- பாண்டியர் ஆட்சியில் நடைபெற்ற வணிகம் பற்றிய செய்திகளை குறிப்பிட்டுள்ளனர்.
- அரபு வணிகர்களுக்கு சுங்க வரி, துறைமுகக் கட்டணங்கள் விலக்கு அளிக்கப்பட்டன.
- பாண்டியர் ஆட்சியில் பல்வேறு வகையான வணிகக் குழுக்கள் செயல்பட்டு வந்தன.
- அவைகள் : நானாதேசி, திசைஆயிரத்து ஐநூற்றுவர், ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார்.
- வணிகப் பொருட்கள் : மிளகு, முத்து, விலை உயர்ந்த கற்கள், குதிரைகள், யானைகள்.
- பாண்டியர்கள் துறைமுகம் காயல்பட்டினம். குதிரைகள் மீது அதிக முதலீடு செய்தனர்.
- வணிகத்தில் பயன்பட்ட தங்க நாணயங்கள் - காசு, பழங்காசு, கனம், கழஞ்சு, பொன்.

---

## 5. சோழர், பாண்டியர் காலக் கட்டடக் கலையின் ஒற்றுமை, வேற்றுமைகள் :

| சோழர் காலக் கட்டடக் கலை | பாண்டியர் காலக் கட்டடக் கலை |
|---|---|
| தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், தாராசுரம் கோயில் போன்ற கோயில்களைக் கட்டினர். | கல்லறைக் கோயில்கள், குடைவரைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் என பல்வேறு மாதிரிகளில் கட்டினர். |
| சோழர்களின் கோயில்கள் பிரமாண்டமாக பெரிய அளவில் கட்டப்பட்டது. | பாண்டியர்களின் கோயில்கள் எளிமையாக சிறிய அளவில் கட்டப்பட்டது. |
| சோழர்களின் முதன்மைக் கடவுளான சிவன் சிலையை பல்வேறு வடிவங்களில் செதுக்கி உள்ளனர். | சிவன், விஷ்ணு, பிரம்மன், கணேசன், சுப்பிரமணியர், சூரியன், கொற்றவை சிலைகள் வடிக்கப்பட்டு உள்ளன. |
| சோழர்கள் மண்டபங்களைக் கட்டுவது, பிரகார வீதிகளை அமைப்பது, புதிய கோபுரங்களை எழுப்புவது போன்ற விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டனர். | பாண்டியர்கள் மண்டபங்களைக் கட்டுவது, பிரகார வீதிகளை அமைப்பது, புதிய கோபுரங்கள் எழுப்புவது போன்ற விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டனர். |
| இராஜராஜ சோழன் ஆட்சிக் காலத்தில் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்த மடாலயம் கட்டப்பட்டது. | பாண்டியர்கள் ஆனைமலை, கழுகுமலை ஆகிய இடங்களில் சமண குகைகள் கட்டப்பட்டது. |

# பாடம் - 12

## பாமினி விஜயநகர அரசுகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. **ஹரிஹரர் மற்றும் புக்கர் விஜயநகரப் பேரரசை ஏற்படுத்தும் முன்பாக ........................ இடம் பணி செய்தனர்.**

   அ) காகதியர் ஆ) ஹொய்சாளர் இ) பீஜப்பூர் சுல்தான் ஈ) யாதவர்

2. **கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.**

   அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம்

   ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

   இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

   ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

3. **விஜயநகர அரசின் அரச முத்திரை ...........................**

   அ) பன்றி ஆ) புலி இ) மீன் ஈ) வில்

4. **........................ என்ற நூலை கங்காதேவி எழுதினார்.**

   அ) மனுசரிதம் ஆ) ஆமுக்தமால்யதா

   இ) பாண்டுரங்க மகாத்மியம் ஈ) மதுரா விஜயம்

5. **........................ சங்கம வம்சத்தின் சிறந்த ஆட்சியாளராகக் கருதப்பட்டார்.**

   அ) முதலாம் தேவராயர் ஆ) இரண்டாம் தேவராயர்

   இ) கிருஷ்ணதேவராயர் ஈ) வீர நரசிம்மர்

6. **கிருஷ்ண தேவராயர் தன் வெற்றிகளின் நினைவாக வெற்றித் தூணை எழுப்பிய இடம்.**

   அ) பெல்காம் ஆ) கட்டாக் இ) சிம்மாச்சலம் ஈ) இராஜமகேந்திரவரம்

7. **எந்த இரு பகுதிகளிடையே இடைப்படு நாடாகப் புதுக்கோட்டை இருந்தது ..................**

   அ) சோழ மற்றும் விஜயநகர அரசுகள் ஆ) சோழ மற்றும் பாண்டிய அரசுகள்

   இ) சேர மற்றும் பாண்டிய அரசுகள் ஈ) சோழ மற்றும் சேர அரசுகள்

8. **ஷா நாமாவை எழுதியவர் .....................**

   அ) பிர்தௌசி ஆ) இபன் பதூதா

   இ) நிக்கோலோ டி கோன்டி ஈ) டோமிங்கோ பயஸ்

9. **முகம்மது கவான் ஒரு மதரசாவை நிறுவி அதில் 3000 கையெழுத்து நூல்களை வைத்திருந்த இடம் .......................**

   அ) பெரார் ஆ) பீஜப்பூர் இ) பீடார் ஈ) அகமது நகர்

10. **.......................... கோல்கொண்டா கோட்டையைக் கட்டினார்.**

    அ) இராஜா கிருஷ்ணதேவ் ஆ) சுல்தான் குலி-குதுப்-உல்-முல்க்

    இ) முகமது கவான் ஈ) பாமன் ஷா

**11. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.**

அ) விஜயநகர அரசின் அரசர்கள் ஐந்து வம்சங்களாகச் சுமார் 300 ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.

ஆ) ஆந்திரக் கடற்கரைப் பகுதிகளில் ஒரிசாவின் கஜபதி மற்றும் பாமினி அரசுகள் இடையே கடும் போர் நடைபெற்றது.

இ) அப்துர் ரசாக் ஒரு பாரசீகத் தூதுவராகக் கொச்சியில் இருந்த சாமரியின் அவைக்கு வந்தார்.

ஈ) பாமினி அரசர்கள் அதிக அளவில் தங்க நாணயங்களை பல்வேறு வகையான தெய்வங்களின் உருவங்களுடன் வெளியிட்டனர்.

**12. கீழ்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு**

**(i)** முதலாம் முகமது ஏற்படுத்திய சிறந்த அரசு அவருக்குப் பின் வந்த சுல்தான்களாலும் மராத்தியர்களாலும் பின்பற்றப்பட்டது.

**(ii)** கவான் போர்ச்சுகீசிய வேதியியல் நிபுணர்களைக் கொண்டு வெடிமருந்தைத் தயார் செய்வது, பயன்படுத்துவது ஆகியவற்றைக் கற்றுதரச் செய்தார்.

அ) (i) மற்றும் (ii) சரி    ஆ) (i) மற்றும் (ii) தவறு

இ) (i) சரி (ii) தவறு    ஈ) (i) தவறு (ii) சரி

**13. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ) :** பாமன்ஷா மிகச்சரியாகத் தாக்குதல் தொடுத்து வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்டவீடு ஆகியன மீது ஆதிக்கம் செலுத்தி ஆண்டுதோறும் திறை செலுத்த வைத்தார்.

**காரணம் (கா) :** இது அடிக்கடி போர்கள் ஏற்பட வழி வகுத்தது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமன்று.

ஆ) கூற்று சரி, காரணம் தவறு.

இ) கூற்றும் தவறு காரணமும் தவறு.

ஈ) கூற்று சரி, காரணத்திற்கு கூற்று சரியான விளக்கமாகும்.

**14. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **(i)** அப்துர் ரசாக் | - | 1. ரஷ்யா |
| **(ii)** நிகிடின் | - | 2. சாளுவ நாயக்கர் |
| **(iii)** டோமிங்கோ பயஸ் மற்றும் நூனிஸ் | - | 3. பாரசீகம் |
| **(iv)** செல்லப்பா | - | 4. போர்த்துகல் |

அ) 1, 2, 3, 4    ஆ) 4, 3, 2, 1    இ) 2, 1, 4, 3    ஈ) 3, 1, 4, 2

## II. குறுகிய விடை தருக :

### 1. விஜயநகரைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகள் :

- கன்னடம், தெலுங்கு, தமிழ் மொழிகளிலுள்ள ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள்.
- சமஸ்கிருத மொழி செப்புப் பட்டயங்கள், அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள்.
- கோவில்கள், அரண்மணைகள், கோட்டைகள், மசூதிகள் போன்ற கட்டிடங்கள்.

---

### 2. விஜயநகர அரசு ஏற்படுத்தியவர்கள் மற்றும் அதன் பெயர் காரணம் :

**விஜயநகர அரசு ஏற்படுத்தியவர்கள் :**

- சங்கமரின் புதல்வர்களான ஹரிஹரர் மற்றும் புக்கர் ஏற்படுத்தினார்கள்.
- 1336 ஆம் ஆண்டு விஜயநகர அரசு தோற்றுவிக்கப்பட்டது.

**விஜயநகர அரசு பெயர் காரணம் :**

- வெற்றி நகரம் என்ற பொருள் கொண்ட விஜயநகரத்தில் ஒரு அரசை நிறுவினார்கள்.
- விஜயநகரம் தலைநகரமாக விளங்கியதால் விஜயநகர அரசு என அறிவித்தார்கள்.

---

### 3. பாமினி, விஜயநகர அரசுகளுக்கிடையே பகைமை ஏற்பட மூன்று முக்கியக் காரணங்கள் :

- வளமான ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியைக் கட்டுப்படுத்துதல்.
- இராணுவத்திற்குத் தேவைப்படும் குதிரைகளை இறக்குமதி செய்தல்.
- கோவா, ஹனோவர் ஆகிய மேற்கு கடற்கரை துறைமுகங்களை கட்டுப்படுத்துதல்.

---

### 4. தராப் பற்றிய குறிப்பு :

- பாமன்ஷா தனது ஆட்சிப் பகுதியை நான்கு மாகாணங்களாகப் பிரித்தார்.
- மாகாணங்கள் - தராப்ஸ் என்று அழைக்கப்பட்டன. தனி ஆளுநர் இருந்தார்.
- ஆளுநரே தாரப் பகுதியின் படைகளை வழிநடத்தினார்.

---

### 5. முதலாம் முகமது பற்றி அறிவன :

- பாமனி சுல்தான் முதலாம் முகமது வாரங்கல் மீது படையெடுத்துச் சென்றார்.
- கோல்கொண்டா கோட்டையைத் தாக்கி கைப்பற்றிக் கொண்டார்.
- ரெய்ச்சூர் பகுதியைக் கைப்பற்ற விஜயநகர அரசுடன் நீண்டகாலம் போர் புரிந்தார்.

---

## III. சுருக்கமான விடை தருக :

### 1. பாமினி அரசு நிறுவப்பட்ட விதம், நிறுவியவர் பற்றிய குறிப்பு :

- வடக்கு கர்நாடகா தில்லி சுல்தானியத்தின் ஆட்சியின் கீழ் இருந்த பகுதியாகும்.
- ஜாபர்கான் வடக்கு கர்நாடகாவில் பாமினி அரசை 1347-இல் தோற்றுவித்தார்.
- அலாவுதீன் பாமன் ஷா என்ற பட்டத்தை ஜாபர்கான் சூட்டிக் கொண்டார்.
- தனது தலைநகரை தேவகிரியில் இருந்து குல்பர்காவிற்கு மாற்றிக் கொண்டார்.

### 2. ராக்சஷி தங்கடி போர் :

- ◈ தக்காண சுல்தான்கள் விஜயநகர அரசுக்கு எதிராக இறுதிப்போர் புரிந்தனர்.
- ◈ 1565 இல் தலைக்கோட்டை போர் அல்லது ராக்சஷி - தங்கடி போர் நடைபெற்றது.
- ◈ ராக்சஷி - தங்கடி போரின் இறுதியில் விஜயநகரப் படைகள் தோல்வி அடைந்தது.
- ◈ விஜயநகர படைக்கு தலைமையேற்ற ராமராஜர் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

---

### 3. கிருஷ்ண தேவராயர் விஜயநகர அரசின் சிறந்த ஆட்சியாளராகப் போற்றப்படக் காரணங்கள்:

- ◈ கிருஷ்ண தேவராயர் பாமினி சுல்தான்கள் மீது படையெடுத்து வெற்றி பெற்றார்.
- ◈ ஒரிசாவை ஆட்சி செய்த கஜபதி அரசன் மீது படையெடுத்து வெற்றி பெற்றார்.
- ◈ நாயக் அல்லது நாயங்காரா முறையை மறுசீரமைத்து சட்ட அங்கீகாரம் கொடுத்தார்.
- ◈ ஸ்ரீசைலம், திருப்பதி, காளஹஸ்தி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய கோவில்களுக்குக் கொடையளித்தார்.

---

### 4. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்? :

- ◈ பாமன்ஷா இரண்டாம் அலெக்சாண்டர் என்ற பெயரில் நாணயங்களை வெளியிட்டார்.
- ◈ பாமினி அரசை நிறுவிய பாமன்ஷா 11 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தார்.
- ◈ தனது அரசியல் எதிரிகளை அடக்கி, கப்பம் வசூலிக்க பல போர்களை புரிந்தார்.
- ◈ ராஜமுந்திரி, கொண்டவீடு அரசுகள் மீது பலமுறை படையெடுத்து வெற்றி பெற்றார்.

---

### 5. கோல்கொண்டா கோட்டையின் அமைவிடம், அதன் அமைப்பு :

- ◈ ஹைதராபாத் அருகே உள்ள ஒரு மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- ◈ கோல்கொண்டா கோட்டை ஒலிஅம்ச அடிப்படையில் ஒரு சிறந்த கட்டடமாகும்.
- ◈ கோட்டையினுள் ஒரு அரசவையும், ஒரு அழகிய மாளிகையும் காணப்படுகிறது.
- ◈ கோட்டையின் உயர்ந்த பகுதி பாலாஹிசார். ரகசிய நிலத்தடி சுரங்கப்பாதை உள்ளது.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு :

- ◈ ரெய்ச்சூரை கைப்பற்ற விஜயநகர அரசுடன் நீண்டகாலப் போர்கள் மேற்கொண்டார்.
- ◈ வாரங்கல் மீது படையெடுத்தார். கோல்கொண்டா கோட்டையைக் கைப்பற்றினார்.
- ◈ முதலாம் முகமது சிறந்த அரசு முறை நிர்வாகத்தைப் பின்பற்றினார்.
- ◈ எட்டு அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தினார்.
- ◈ வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தார்.

◈ நிறுவன மற்றும் புவியியல் ரீதியில் பேரரசில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தினார்.
◈ குல்பர்காவில் இரு மசூதிகள் கட்டினார். ஒரு மசூதி 1367 இல் கட்டி முடிக்கப்பட்டது.

---

**2. முகமது கவானின் ஆட்சிமுறை மற்றும் ராணுவ நிர்வாகம் :**

◈ மூன்றாம் முகம்மதுவின் பிரதம மந்திரி. சிறந்த நிர்வாகத் திறன் கொண்டிருந்தார்.
◈ கொங்கணம், ஒரிசா, விஜயநகர மன்னர்களுக்கு எதிராக போர் நடத்தி வென்றார்.
◈ பாரசீக வேதியியல் வல்லுநர்களின் வழிகாட்டுதல்படி வெடிமருந்து பயன்படுத்தினார்.
◈ மாகாண ஆளுநர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி சிறப்பாக ஆட்சி செய்தார்.
◈ பாமினி பேரரசை நிர்வாக வசதிக்காக எட்டு மாகாணங்களாகப் பிரித்தார்.
◈ மாகாண ஆளுநர்களின் ராணுவ அதிகாரத்தை குறைத்தார்.
◈ ஒரு ஆளுநருக்கு ஒரு கோட்டை மட்டுமே அனுமதிக்கப்பட்டது.

---

# பாடம் - 13

## பண்பாட்டு ஒருமைப்பாடு : இந்தியாவில் பக்தி இயக்கம்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. அத்வைதம் என்னும் தத்துவத்தை இந்து மதத்திற்கு வழங்கியவர்**

அ) ஆதிசங்கரர்   ஆ) இராமானுஜர்   இ) இராமானந்தர்   ஈ) சைதன்யர்

**2. வைதீக வேதப் பிரிவுகளுக்கும், சிரமணப் பிரிவுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களைப் பற்றிக் குறிப்பிடுவது ..................................**

அ) இராமாயணம்   ஆ) பாகவத புராணம்

இ) திருத்தொண்டர்களின் புகழ் பாடும் தொகுப்புகள்   ஈ) பால லீலா

**3. கூன்பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர் ..................................**

அ) முதலாம் மகேந்திர வர்மன்   ஆ) மாறவர்மன் அரிகேசரி

இ) நரசிம்ம வர்மன்   ஈ) சுந்தரபாண்டியன்

**4. சமண மதத்திலிருந்த போது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார் ..........................**

அ) அரிசேனா   ஆ) தீர்த்தங்கரர்   இ) சிவஞானசித்தியார்   ஈ) தர்மசேனர்

**5. பக்கீர் எனக் குறிப்பிடப்படுபவர் ......................................**

அ) இஸ்லாமிய ஞானி   ஆ) பௌத்தத் துறவி   இ) இந்துத் துறவி   ஈ) சீக்கிய குரு

**6. மாதாவாச்சாரியார் .................................. தத்துவப் பள்ளியைச் சார்ந்தவர்.**

அ) துவைதம்   ஆ) அத்வைதம்   இ) விசிஷ்டாத்வைதம்   ஈ) புஷ்டி மார்க்கம்

**7. இராமானந்தரின் சீடர் ..................................**

அ) சைதன்யர்   ஆ) ரவிதாஸ்   இ) குருநானக்   ஈ) கபீர்

8. **முதன் முதலாக இந்தி மொழியில் தனது மதத் தத்துவப் பிரச்சாரத்தை மேற்கொண்டவர்.**

அ) ரவிதாஸ் ஆ) இராமானந்தர் இ) கபீர் ஈ) நாமதேவர்

9. **அக்பரின் அரசவையில் "ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகர்" என்று அறியப்பட்டவர்.**

அ) சூர்தாஸ் ஆ) துக்காராம் இ) இராமானந்தர் ஈ) மீராபாய்

10. **மராத்திய மன்னர் சிவாஜியின் சமகாலத்தவர் .................................. ஆவார்**

அ) இராமானந்தர் ஆ) மீராபாய் இ) சூர்தாஸ் ஈ) துக்காராம்

11. **சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.**

அ) தனது தொடக்கக்கால வாழ்வில் சைவராக இருந்த அப்பர் தனது தமக்கையால் சைவ மதத்திலிருந்து சமண மதத்திற்கு மாறினார்.

ஆ) சூஃபி இயக்கத்தவர் கடவுளை அழகின் உச்சமாகக் கருதினர்

இ) இராம பக்தியை முன்னிலைப்படுத்தி வங்காள வைணவர்கள் இந்து மதத்தைச் சீர்திருத்த முயன்றனர்.

ஈ) பௌத்த மத நூல்களில் ரவிதாஸின் பக்திப் பாடல்கள் இணைக்கப்பட்டுள்ளன.

12. **கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ) :** மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.

**காரணம் (கா) :** அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று தவறு; காரணம் தவறு.

இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

13. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| (i) | கபீர் | - 1. சாகித்திய லாகிரி |
| (ii) | சூர்தாஸ் | - 2. ஷேக் தாதி |
| (iii) | சூபியிஸம் | - 3. சம்பந்தர் |
| (iv) | கூன்பாண்டியன் | - 4. நெசவாளர் |

அ) 2, 3, 4, 1 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 4, 3, 1 ஈ) 3, 4, 2, 1

---

## II. குறுகிய விடை தருக :

### 1. பக்தி இயக்கத்திற்கு இராமானுஜர் ஆற்றிய சேவைகள் :

- இராமானுஜர் சமய சமத்துவத்திற்குப் பெரும் ஆதரவாளராகத் திகழ்ந்தார்.
- பக்தி இயக்கம் ஒரு தத்துவ, சிந்தாந்த இயக்கமாக மறுவடிவம் கொண்டது.
- இராமானுஜர் வசிஷ்டாத்வைதம் தத்துவத்தை உருவாக்கினார்.

**2. பக்தி இயக்கத்தில் ரவிதாஸின் பங்கு :**

◈ பக்தி இயக்கத் துறவியும் புலவருமான ரவிதாஸ் இராமானந்தரின் சீடராவார்.

◈ ஆன்மீக விடுதலைக்கு ஒற்றுமையை ஊக்குவித்தார்.

◈ சமூகப் பிரிவுகள், ஆண் - பெண் சமத்துவமின்மை ஆகியவற்றை எதிர்த்தார்.

---

**3. இராமானந்தரின் போதனைகள் :**

◈ இராமானுஜரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு வைணவத்தை போதித்தார்.

◈ இராமர், சீதை மீது பக்தி கொள்ளக் கூறினார். சாதி முறையை நிராகரித்தார்.

◈ கடவுளின் முன்னால் அனைவரும் சமம் என்ற கொள்கையைப் போதித்தார்.

---

**4. பண்பாட்டுப் பாரம்பரியத்தின் சிறப்பிற்குக் காரணமாக அமைந்த மீராபாயின் பாடல்களும் கவிதைகளும் :**

◈ மீராபாய் அன்பு ஒன்றே கடவுளை அடையும் வழியென போதனை செய்தார்.

◈ மீராபாய் கிருஷ்ணர் வழிபாட்டை போதித்தார். பஜனைப் பாடல்களைப் பாடினார்.

◈ அவரது பக்திப் பாடல்களும், இசைப் பாடல்களும் வளமான பண்பாட்டு மரபாகும்.

---

**5. இந்து துறவிகள் இஸ்லாமின் மீது கொண்டிருந்த இரண்டு வெவ்வேறு அணுகுமுறைகள்:**

**1. எதிரிகளாக கருதினர்.**

◈ இஸ்லாம் உருவ வழிபாட்டை கடுமையாக எதிர்த்தது.

◈ இஸ்லாமியர்களை இந்து சமயத்தின் எதிரிகளாகக் கருதினர்.

**2. சகோதரர்களாக கருதினர்.**

◈ இஸ்லாத்தின் ஒரே கடவுள் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர்.

◈ இந்துக்களும் இஸ்லாமியர்களும் சகோதரர்களே எனக் கருதினர்.

---

## III. சுருக்கமான விடை தருக :

**1. மத மறுமலர்ச்சியின் உறைவிடமாகத் தென்னிந்தியா விளங்கியது :**

◈ நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோற்றுவித்த மத மறுமலர்ச்சியே பக்தி இயக்கம்.

◈ நாயன்மார்கள் சைவத்தையும், ஆழ்வார்கள் வைணவத்தையும் போற்றி வளர்த்தனர்.

◈ உள்ளத்தை உருக்கும் பாடல்களால் பக்தி கோட்பாட்டிற்கு ஒரு வடிவம் கொடுத்தனர்.

◈ மத மறுமலர்ச்சி அரசியல், சமூகம், பண்பாடு, மொழியில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

---

**2. சூர்தாஸ், துக்காராம் ஆகியோரின் போதனைகள் :**

**சூர்தாஸ் :**

◈ அன்பு எனும் மதத்தையும், கடவுளிடம் பக்தியோடு இருப்பதையும் போதித்தார்.

◈ சூர்தாஸ் கிருஷ்ணர் குறித்து இந்தி மொழியில் பல பாடல்களை இயற்றினார்.

**துக்காராம் :**

◈ துக்காராம் கடவுள் பற்று, மன்னிக்கும் குணம், மன அமைதி ஆகியன போதித்தார்.

◈ உருவ வழிபாட்டை நிராகரித்தார். சமத்துவம், சகோதரத்துவத்தைப் பரப்பினார்.

---

### 3. கபீரின் போதனைகள் :

◈ கபீர் தனது பாடல்களின் மூலம் சடங்குகள், சம்பிரதாயங்களை கேலி செய்தார்.

◈ கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் எனக் கருதினார். ஒற்றுமையை போதித்தார்.

◈ இந்து - இஸ்லாம் மதங்கள் இடையே காணப்பட்ட பிரிவினைகளை சாடினார்.

◈ உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதிமுறை ஆகியவற்றை எதிர்த்தார்.

---

### 4. கபீரிடமிருந்து சைதன்யர் வேறுபடும் விதம் :

◈ கபீர் இறைவனை புரிந்து கொள்ள அனைத்து பிரிவு மக்களையும் ஒருங்கிணைத்தார்.

◈ சைதன்யர் நடத்தியது ஒருமைப்பாட்டிற்கான இயக்கமல்ல, அது ஒரு மீட்பு இயக்கம்.

◈ விஷ்ணுவை பல வடிவங்களில் வழிபட்டார். கிருஷ்ணர் வழிபாட்டை வலியுறுத்தினார்.

◈ சைதன்யர் மற்ற கடவுள்களைவிட கிருஷ்ணர் உயர்வானவர் எனப் போதித்தார்.

---

### 5. பக்தி இயக்கத்தின் விளைவுகள் :

◈ முக்தி என்பது அனைத்து பிரிவு மக்களுக்கும் உரியது என்ற கருத்து உருவானது.

◈ பிராந்திய மொழிகளில் அதிக அளவில் பக்தி இலக்கியங்கள் எழுதப்பட்டன.

◈ பெண்கள் மற்றும் அடித்தட்டு மக்களின் ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டியது.

◈ துறவிகள் துவைதம், அத்வைதம் ஆகிய தத்துவக் கோட்பாடுகளை வழங்கினர்.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. சூபியிஸத்தின் தாக்கம் :

◈ இந்து மதத்தில் தோன்றிய பக்தி இயக்கத்திற்கு இணையாக இஸ்லாம் மதத்தில் தோன்றிய இயக்கமே சூபியிஸம்.

◈ சூபியிஸம் நகரங்களிலும் கிராமங்களிலும் வேர்கொண்டது. அரசியல், சமூக, பண்பாட்டுத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

◈ சூபியிஸம் அனைத்து விதமானமதச் சம்பிரதாயம், பழமைவாதம், வெளிவேடம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடியது.

◈ ஆன்மீகப் பேரின்ப நிலையை மட்டும் இலக்காகக் கொண்ட புதிய உலக ஒழுங்கை உருவாக்க ஆசை கொண்டது.

◈ அரசியல் அதிகாரத்திற்கான போர்களுக்கு மத்தியில் சூபிகள் அமைதி மற்றும் மகிழ்ச்சியை நிலைநாட்டப் பணியாற்றினர்.

◈ சூபிகளின் மகத்தான சாதனை இந்துக்கள் - முஸ்லீம்கள் இடையே ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தியது.

**2. பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகள் :**

- ◈ பக்தி இயக்கச் சீர்த்திருத்தவாதிகள் ஒரே கடவுள் கொள்கையைப் போதித்தனர். உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர்.
- ◈ இறைவனிடம் ஆழமான பற்றும் நம்பிக்கையும் கொள்வதன் மூலம் முக்தி அடைய முடியும் எனும் கருத்தை முன்வைத்தனர்.
- ◈ இறைவனுடைய அருளைப் பெற அர்ப்பணிப்புடன், ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாடவேண்டும் என வலியுறுத்தினர்.
- ◈ உலக சகோதரத்துவம் எனும் கொள்கையைப் போதித்தனர். மக்களைப் பிரித்து வைக்கும் சாதி முறையைக் கண்டித்தனர்.
- ◈ சமயச் சடங்குகள், புனித யாத்திரைகளை கண்டித்தனர். அனைத்து உயிர்களும் கடவுளின் குழந்தைகளே எனக் போற்றினர்.
- ◈ எந்த மொழியையும் புனிதமான மொழியாக அவர்கள் கருதவில்லை. மக்களின் மொழிகளில் பாடல்கள் இயற்றினர்.

---

# பாடம் - 14

## முகலாயப் பேரரசு

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. 1526 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிப்பட் போரில், பாபர் ...................... யை திறம்பட பயன்படுத்தியதின் மூலம் வெற்றி பெற்றார்**

அ) காலாட்படை ஆ) குதிரைப்படை **இ) பீரங்கிப் படை** ஈ) யானைப்படை

**2. கடைசிப் போரான காக்ரா போரில் பாபர் ................................ எதிராகப் போரிட்டார்.**

**அ) ஆப்கானியர்களுக்கு** ஆ) ரஜபுத்திரர்களுக்கு

இ) துருக்கியர்களுக்கு ஈ) மராட்டியர்களுக்கு

**3. ......................................... தனது உயரிய அரசியல் மற்றும் இராணுவத் திறமையினால் சௌசாப் போரில் வெற்றி பெற்றார்.**

அ) பாபர் ஆ) ஹுமாயூன் **இ) ஷெர்கான்** ஈ) அக்பர்

**4. ...................... நிலஉடைமை உரிமை முறையில், நிலத்திற்கான வரியை வசூலிக்கும் பொறுப்பும், அந்நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.**

**அ) ஜாகீர்தாரி** ஆ) மகல்வாரி இ) ஜமீன்தாரி ஈ) மன்சப்தாரி

**5. இளவரசர் குஸ்ருவுடன் இணைந்து கலகத்தை தூண்டிவிட்டதற்காக ஜஹாங்கீரால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் .................... ஆவார்.**

**அ) குரு அர்ஜுன் தேவ்** ஆ) குரு ஹர் கோபிந்த்

இ) குரு தேஜ் பகதூர் ஈ) குரு ஹர் ராய்

6. **அக்பரது நிதி நிர்வாகம் ........................ நிர்வாக முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.**
அ) பாபர் ஆ) ஹுமாயுன் **இ) ஷெர்ஷா** ஈ) இப்ராஹிம் லோடி

7. **........................ பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பதினான்காம் லூயி ஆகியோர் சம காலத்தவர்கள்.**
அ) அக்பர் ஆ) ஜஹாங்கீர் **இ) ஷாஜகான்** ஈ) ஔரங்கசீப்

8. **.................................. தனது ஆட்சியின் போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.**
அ) அக்பர் ஆ) ஜஹாங்கீர் இ) ஷாஜகான் **ஈ) ஔரங்கசீப்**

9. **கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் அரசர் .................................. ஆவார்.**
**அ) அக்பர்** ஆ) ஷாஜகான் இ) ஷெர்ஷா ஈ) பாபர்

10. **ஜஹாங்கீர் மற்றும் .................................. அமைத்த ஷாலிமார் தோட்டங்கள், இந்திய தோட்டக் கலையில் குறிப்பிடத்தக்கவையாகும்.**
அ) அக்பர் **ஆ) ஷாஜகான்** இ) ஹுமாயுன் ஈ) ஔரங்கசீப்

11. **.................................. சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.**
அ) ஆக்ராவை **ஆ) குவாலியரை** இ) தில்லியை ஈ) மதுராவை

12. **பாதுஷா நாமா என்பது .................................. ன் வாழ்க்கை வரலாறாகும்.**
அ) பாபர் ஆ) ஹுமாயூன் **இ) ஷாஜகான்** ஈ) அக்பர்

13. **.................................. ஒரு ஜோதிட ஆய்வு நூலாகும்.**
**அ) தஜிகநிலகந்தி** ஆ) ரசகங்காதரா இ) மனுசரிதம் ஈ) ராஜாவலிபதகா

14. **மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றியவர் ..................................**
அ) தாயுமானவர் **ஆ) குமரகுருபரர்**
இ) இராமலிங்க அடிகள் ஈ) சிவப்பிரகாசர்

15. **கீழே உள்ள ஆட்சியாளர்களுள் யார் அக்பரின் சமகாலத்தவர் இல்லை?**
அ) இங்கிலாந்தின் எலிசபெத் ஆ) ஷேக்ஸ்பியர்
இ) பிரான்ஸின் நான்காம் ஹென்றி **ஈ) இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணி**

16. **சரியான கூற்றினைக் கண்டுபிடி.**
அ) இந்திய, பாரசீக மற்றும் இஸ்லாமியக் கட்டடக்கலையின் பாணியில் முகலாயரின் கட்டடக் கலையின் மறுவடிவமாக தாஜ்மஹால் உள்ளது.
ஆ) அக்பரது புதிய தலைநகரமான ஆக்ராமற்றும் அதன் சுற்றுச் சுவர்களுக்குள் பல எழுச்சியூட்டும் கட்டடங்கள் உள்ளன.
**இ) மோதி மசூதி முழுவதும் பளிங்குக்கல்லால் கட்டப்பட்டது.**
ஈ) புராண கிலா ஒரு உயர்ந்த கோட்டையாகும்.

17. **பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.**
(i) ராணா சங்காவின் மூர்க்கமான வலிமை வாய்ந்த படைகள் பாபரின் சக்தி வாய்ந்த படையை எதிர்கொண்டது.
(ii) கன்னோசிப் போருக்குப் பின் அக்பர் நாடு இல்லாத ஒரு இளவரசர் ஆனார்.
அ) (i) சரி ஆ) (ii) சரி **இ) (i) சரி (ii) தவறு** ஈ) (i) மற்றும் (ii) சரியானவை

**18. சரியான கூற்றினைக் கண்டுபிடி.**

அ) ஒவ்வொரு மன்சப்தாருக்கும் 10 முதல் 10,000 வரையிலான படை வீரர்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதை ஜாட்டுகள் தீர்மானித்தனர்.

ஆ) ஷெர்ஷாவின் நாணய முறை, ஆங்கிலேயரின் நாணய முறைக்கு அடித்தளமிட்டது.

இ) முகலாயருக்கும் ராணா பிரதாப் சிங்கிற்கும் இடையே நடைபெற்ற ஹால்டிகாட்டி போர் மிகக் கடுமையான இறுதிப் போர் ஆகும்.

ஈ) சீக்கியப் புனித நூலான "குரு கிரந்தசாகிப்" குரு அர்ஜுன் தேவால் தொகுக்கப்பட்டது.

**19. பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.**

(i) மேற்கில் உள்ள சிந்து முதல் வங்காளத்தில் உள்ள சோனர்கான் வரையிலான கிராண்ட் டிரங்க் சாலையை சீர்படுத்தினார்.

(ii) அக்பர் தனது மிகப் பெரிய படையெடுப்புகளின் மூலமாக மாபெரும் பேரரசிற்கு அடித்தளம் இட்டார்.

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (i) மற்றும் (ii) தவறு

**20. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ) :** பாபர் முதலாம் பானிப்பட் போரில் வெற்றி பெற்றார்.

**காரணம் (கா) :** பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.

அ) கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று தவறு; காரணம் சரி இ) கூற்று தவறு; காரணமும் தவறு

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**21. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ) :** ஔரங்கசீப் ஆட்சியின் இறுதியில் முகலாயப் பேரரசின் அழிவு ஆரம்பமாயிற்று.

**காரணம் (கா) :** ஔரங்கசீப் தக்காண அரசர்களிடம் நட்புறவாக இருந்தார்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

இ) கூற்றும் தவறு; காரணம் சரி

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

**22. கீழ்க்கண்டவற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது.**

அ) பாஸ்கராச்சார்யா - நீதிநெறி விளக்கம்

ஆ) ஆமுக்தமால்யதா - கிருஷ்ணதேவராயர்

இ) ஜகன்னாத பண்டிதர் - கங்காதரா

ஈ) அல்லசானி பெத்தண்ணா - மனுசரித்ரா

**23. பொருத்துக.**

(i) அபுல் பாசல் - 1. ஔரங்கசீப்

(ii) ஜும்மாமசூதி - 2. அக்பர்

(iii) பாதுஷாஹி மசூதி - 3. ஷெர்ஷா

(iv) புராண கிலா - 4. ஷாஜகான்

அ) 2, 4, 1, 3 ஆ) 3, 2, 1, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 1, 3, 2, 4

## II. குறுகிய விடை தருக :

### 1. பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டிய நிகழ்வு :

- ◈ தைமூர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து டெல்லியை சூறையாடினார்.
- ◈ பாபரை இந்தியாவின் மீது படையெடுக்க தௌலத்கான் லோடி அழைத்தார்.
- ◈ பாபரை இந்தியாவின் மீது படையெடுக்க ராணா சங்கா தூது அனுப்பினார்.

---

### 2. அக்பர், பைராம்கானை கையாண்ட விதம் :

- ◈ பிரபுக்களிடம் இறுமாப்புடன் நடந்து கொண்ட பைராம்கானை பதவி நீக்கினார்.
- ◈ பைராம்கான் கலகத்தில் ஈடுபட்டார். ஆனால் அக்பர் கலகத்தை அடக்கினார்.
- ◈ பைராம்கானை மெக்காவிற்கு புனித யாத்திரை செல்லுமாறு அறிவுறுத்தினார்.

---

### 3. சிறு குறிப்பு வரைக. அ) வில்லியம் ஹாக்கின்ஸ் ஆ) சர் தாமஸ்ரோ

**அ) வில்லியம் ஹாக்கின்ஸ்.**

- ◈ இந்தியாவில் ஆங்கிலேய வணிகக் குடியேற்றம் நிறுவ அனுமதி கோரினார்.
- ◈ வில்லியம் ஹாக்கின்ஸ் கோரிக்கையை ஜஹாங்கீர் நிராகரித்தார்.

**ஆ) சர் தாமஸ்ரோ.**

- ◈ சூரத் நகரில் ஒரு வணிகக் குடியேற்றத்தை நிறுவ அனுமதி கோரினார்.
- ◈ சர் தாமஸ்ரோ ஜஹாங்கீரிடம் நேரடியாக அனுமதிப் பெற்றார்.

---

### 4. முகலாயக் கட்டடக் கலையின் மறுவடிவமாக கருதப்படுவதும் அதன் வடிவமைப்பும் :

- ◈ தாஜ்மஹால் முகலாயக் கட்டடக் கலையின் மறுவடிவமாகக் கருதப்படுகிறது.
- ◈ மையத்தில் ஒரு கவிகை மாடம், அதைச் சுற்றி நான்கு ஸ்தூபி மாடங்கள் உள்ளன.
- ◈ நான்கு மூலைகளிலும் தனித்தனி கோபுரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

---

### 5. ஔரங்கசீப்பிற்கு எதிராக வடபகுதியில், மூண்ட மூன்று எழுச்சிகள் :

- ◈ மதுரா பகுதியைச் சேர்ந்த ஜாட் இனத்தவர் நடத்திய ஜாட்களின் கலகம்.
- ◈ ஹரியானா பகுதியைச் சேர்ந்த சத்னாமியர்கள் நடத்திய கிளர்ச்சி.
- ◈ ஒன்பதாவது சீக்கிய குரு தேஜ்பகதூர் நடத்திய சீக்கியர்களின் கிளர்ச்சி.

---

## III. சுருக்கமான விடை தருக :

### 1. "வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹுமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்" :

- ◈ பஞ்சாபை கைப்பற்றிய தனது சகோதரர் கம்ரானை தண்டிக்கத் தவறினார்.
- ◈ கிளர்ச்சியில் ஈடுபட்ட அஸ்காரி மற்றும் ஹிண்டாலை தண்டிக்கத் தவறினார்.
- ◈ பொய்யான வாக்குறுதிகளை அளித்த ஷெர்ஷாவை தண்டிக்கத் தவறினார்.
- ◈ ஹுமாயூன் 1555 இல் நூலகத்தின் மாடிப்படிகளில் தவறி விழுந்து இறந்தார்.

## 2. "தீன் இலாஹி" பற்றி நாம் அறிவன :

- அக்பர் 1582 இல் தீன் இலாகி என்ற ஒரு புதிய தத்துவத்தை வெளியிட்டார்.
- தீன் இலாகி தத்துவத்தை விளக்கும் சரியான சொல் தௌகித் - இ - இலாகி.
- தௌகித் - இ - இலாகி என்பதன் பொருள் தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடாகும்.
- தீன் இலாகி என்பது ஒரு புதிய மதமல்ல. அது ஒரு தத்துவக் கோட்பாடு மட்டுமே.

---

## 3. அக்பரது சித்தூர் முற்றுகை :

- அக்பர் சித்தூர் கோட்டையை ஆறு மாதகாலம் தொடர்ந்து முற்றுகையிட்டார்.
- மேவார் அரசன் ராணா உதய் சிங்கிடம் இருந்து சித்தூரை அக்பர் கைப்பற்றினார்.
- ஜெய்மால், பட்டா ஆகிய தளபதிகள் உட்பட 30,000 ரஜபுத்திர வீரர்கள் மாண்டனர்.
- ஜெய்மால், பட்டா இருவரின் வீரத்தைப் பாராட்டி ஆக்ராவில் சிலை வைக்கப்பட்டது.

---

## 4. அக்பரது மன்சப்தாரி முறை :

- பிரபுக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- மன்சப்தார் தகுதி ஜாட், சவார் என இருவகைப்பட்டது. ஊதியம் வழங்கப்பட்டது.
- ஜாட் என்பது ராணுவ வீரர்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.
- சவார் என்பது குதிரைகளின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.

---

## 5. முகலாயர் ஆட்சியில் நிறுவப்பட்ட ஐரோப்பியக் குடியேற்றங்கள் :

- போர்த்துகீசியக் குடியேற்றங்கள் : கோவா, டையு, டாமன், பம்பாய், சால்செட்.
- டச்சுக் குடியேற்றங்கள் : மசூலிப்பட்டினம், நாகப்பட்டினம், புலிகாட், காசிம்பஜார்.
- டேனியர் குடியேற்றங்கள் : தரங்கம்பாடி மற்றும் செராம்பூர்.
- பிரெஞ்சுக் குடியேற்றங்கள் : பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம், சூரத்.
- ஆங்கிலேயக் குடியேற்றங்கள் : சென்னை, பம்பாய், கல்கத்தா.

---

## 6. தாராஷூகோ :

- ஷாஜகானின் மூத்த மகன் தாராஷூகோ பட்டத்து இளவரசராக இருந்தார்.
- தாராஷூகோ வாரிசுரிமைப் போரில் ஔரங்கசீப்பிடம் தோல்வியுற்றார்.
- தாராஷூகோ தத்துவஞான இளவரசர் என்று அறியப்பட்டார்.
- உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

---

## 7. அபுல் பாசல் :

- அபுல் பாசல் - அக்பரின் அரசவைப் புலவர். அபுல் பெய்சியின் சகோதரர்.
- அபுல் பாசல் - அக்பர் நாமா, அய்னி அக்பரி ஆகிய இரு நூல்களை இயற்றினார்.
- அக்பர் நாமாவில் அக்பரின் வரலாற்றை தொகுத்து வழங்கியுள்ளார்.
- அய்னி அக்பரியில் முகலாயர்கள் நிர்வாகத்தை பற்றி விவரித்துள்ளார்.

## IV. விரிவான விடை தருக :

### 1. "வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி" - விளக்கம் :

- ◈ அக்பரின் நிதி நிர்வாக முறையானது, பெருமளவு ஷெர்ஷாவின் நிதி நிர்வாக முறையை அடித்தளமாகக் கொண்டது.
- ◈ ஷெர்ஷாவைப் போலவே அக்பரும் தனது நாட்டில் நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையைப் பின்பற்றினார்.
- ◈ ராஜா தோடர்மால் அறிமுகம் செய்த ஐப்தி முறையை அக்பர் பிரகடனம் செய்தார். நிலங்கள் முறையாக அளக்கப்பட்டன.
- ◈ நிலத்தின் தரம், அளவு, விளைபயிர் அடிப்படையில் விவசாயி பணமாகச் செலுத்த வேண்டிய வரி நிர்ணயம் செய்யப்பட்டது.
- ◈ விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய வரிகள் தொடர்பான அட்டவணைகள் தஸ்தர் எனப்பட்டன.
- ◈ ஒருசில பகுதிகளில் ஜமீன்தாரி முறையும், ஜாகீர்தாரி முறையும் தொடர்ந்து செயல்பட அனுமதி வழங்கப்பட்டன.

---

### 2. அக்பரின் மதக் கொள்கை ஔரங்கசீப்பின் மதக் கொள்கையிலிருந்து மாறுபட்டது :

| அக்பர் | ஔரங்கசீப் |
|---|---|
| இந்துக்கள் மீதான ஜிஸியா வரியையும் புனிதப் பயண வரியையும் நிறுத்தினார். | ஜிஸியா வரியையும், புனிதப் பயண வரியையும் மீண்டும் விதித்தார். |
| இந்துக்கள் புதிதாக கோயில்கள் கட்டிக் கொள்ள தாராளமாக அனுமதித்தார். | புதிய கோவில்கள் கட்டக் கூடாது என தடை செய்து உத்தரவிட்டார். |
| சமய சகிப்புத் தன்மையை போதித்த அக்பர் தீன்இலாஹி என்ற ஒரு புதிய மதப்பிரிவைத் தோற்றுவித்தார். | ஔரங்கசீப் இஸ்லாத்தின் மீது தீவிர பற்று கொண்டவராக இருந்தார். ஒரு உண்மையான முஸ்லீமாக வாழ்ந்தார். |
| அனைத்து மதத்தின் கருத்துக்களையும் மதித்து ஆட்சி செய்தார். | இஸ்லாமிய ஷரியத் சட்டத்தின்படி ஆட்சி செய்தார். பலவித வரிகளை நீக்கினார். |

---

### 3. ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை முகலாயப் பேரரசின் அழிவுக்கு வழி வகுத்தது :

- ◈ தக்காண விவகாரங்களில் ஔரங்கசீப் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதால் நீண்டகால போர் மூண்டது.
- ◈ ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை பேரரசின் மற்ற பகுதிகளில் தோன்றிய எதிர்ப்புகளை அடக்க விடாமல் தடுத்தது.

- தக்காணப் படையெடுப்புகளின் விளைவாக கருவூலம் காலியானதால் முகலாயப் பேரரசு அழிவை நோக்கிச் சென்றது.
- தக்காணப் பகுதியில் வளர்ந்து வந்த மராத்தியரின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த எண்ணி சிவாஜியை எதிர்த்து போரிட்டார்.
- தக்காணத்தின் ஷியா பிரிவு சுல்தானிய அரசுகளான பீஜப்பூர், கோல்கொண்டா மீது பலமுறை படையெடுத்துச் சென்றார்.
- தக்காணத்தைப் புகலிடமாகக் கொண்ட தனது மகன் இளவரசர் அக்பரின் கிளர்ச்சிகளை ஒடுக்க படையெடுத்தார்.

---

# பாடம் - 15

## மராத்தியர்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. வலிமை மிக்க கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றியோர் ..................................**

அ) மராத்தியர் ஆ) முகலாயர் இ) ஆங்கிலேயர் ஈ) நாயக்கர்

**2. சிவாஜியின் குரு .................................. ஆவார்.**

அ) தாதாஜி கொண்டதேவ் ஆ) ராம்தாஸ்

இ) துக்காராம் ஈ) ஷாஜி போன்ஸ்லே

**3. புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும் .................... க்கும் இடையே கையெழுத்தானது.**

அ) அஃப்சல்கான் ஆ) செயிஷ்டகான் இ) ஜெய்சிங் ஈ) ஔரங்கசீப்

**4. சிவாஜியின் ஆலோசனை சபை .................................. என்று அழைக்கப்பட்டது.**

அ) அஷ்டபிரதானம் ஆ) அஷ்டதிக்கஜங்கள்

இ) நவரத்தினங்கள் ஈ) பஞ்சபாண்டவர்கள்

**5. மராத்தியர் கைப்பற்றிய மாவட்டத்தின் வருவாயில் ..................... சௌத் என வசூலிக்கப்பட்டது.**

அ) 1/3 ஆ) 1/4 இ) 1/6 ஈ) 1/10

**6. சிவாஜியின் இராணுவ அமைப்பில் மிகச்சிறிய படை அலகின் தலைவராக ................. இருந்தார்.**

அ) நாயக் ஆ) ஹவில்தார் இ) பர்கிர் ஈ) ஷைலேதார்

**7. மராத்திய சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை மேம்படுத்திய பேஷ்வா .................... ஆவார்.**

அ) முதலாம் பாஜி ராவ் ஆ) பாலாஜி விஷ்வநாத்

இ) பாலாஜி பாஜி ராவ் ஈ) இரண்டாம் பாஜி ராவ்

8. **................................ கோகினூர் வைரத்தை எடுத்துச் சென்றார்.**

அ) அஹமது ஷா அப்தலி ஆ) நாதிர் ஷா

இ) ஷுஜா-உத்-தௌலா ஈ) நஜீப்-உத்-தௌலா

9. **...................................... உடன்படிக்கை முதலாம் ஆங்கிலோ - மராத்தியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.**

அ) மதராஸ் உடன்படிக்கை ஆ) பூனா உடன்படிக்கை

இ) சால்பை உடன்படிக்கை ஈ) பேசின் உடன்படிக்கை

10. **இரண்டாவது ஆங்கிலோ - மராத்தியப் போரின் போது ஆங்கிலேய கவர்னர் ஜெனரலாக இருந்தவர் ................................**

அ) காரன்வாலிஸ் பிரபு ஆ) வெல்லெஸ்லி பிரபு

இ) ஹேஸ்டிங்க்ஸ் பிரபு ஈ) டல்ஹௌசி பிரபு

11. **கிராம அளவில் வருவாய் வசூலை மத்திய அரசுக்கு அனுப்பும் பொறுப்பை ஏற்றிருந்தவர்.**

அ) தேஷ்முக்கு ஆ) குல்கர்னி இ) கொத்வால் ஈ) பட்டேல்

12. **கொங்கணம், கண்டேரி, விஜயதுர்க் ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களை கட்டியவர்.**

அ) பாலாஜி பாஜி ராவ் ஆ) நானா சாகிப்

இ) இரண்டாம் பாஜி ராவ் ஈ) பாலாஜி விஸ்வநாத்

13. **நயங்காரா அமைப்பை மேம்படுத்தியவர் ............................**

அ) இரண்டாம் சரபோஜி ஆ) இராஜா தேசிங்கு

இ) கிருஷ்ணதேவராயர் ஈ) பிரதாப் சிங்

14. **மனிதர்களுக்காகவும் மற்றும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரிக்க ................................ இரண்டாம் சரபோஜியால் நிறுவப்பட்டது.**

அ) சரஸ்வதி மஹால் ஆ) முக்தாம்பாள் சத்திரம்

இ) நவ வித்யா ஈ) தன்வந்திரி மஹால்

15. **கீழ்க்கண்டவற்றுள் இரண்டாம் சரபோஜி எழுதாத புத்தகம் என்ன?**

அ) குமாரசம்பவ சம்பு ஆ) தேவேந்திர குறவஞ்சி

இ) முத்ரராஷ்ஸ்சாயா ஈ) குமாரசம்பவம்

16. **கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.**

அ) சிவாஜியை அடக்கும் முக்கிய நோக்கில் 1660 ஆம் ஆண்டு அஃப்சல்கான் தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

ஆ) சிவாஜியின் வழித்தோன்றல்களைப் பாதுகாப்பதில் செஞ்சி முன்னணியில் செயல்பட்டது.

இ) சிவாஜியின் வருவாய் நிர்வாகம், மனிதாபிமானம் சார்ந்து, உற்பத்திச் செய்பவர்-களுக்கு சாதகமாக அமைந்திருந்தது.

ஈ) சர்தேஷ்முகி என்பது சிவாஜி வசூலித்த 15 சதவிகித கூடுதல் வருவாயாகும்.

**17. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.**

அ) ஆங்கிலேயர்கள் மராத்தியருடன் நட்புறவு கொண்டு தக்காணத்தில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமம் பெற்றனர்.

ஆ) 1749-இல் ஆற்காட்டு நவாப் தோஸ்து அலியை சாஹு தோற்கடித்துக் கொன்றார்.

இ) பேஷ்வாக்களின் கீழ் நீதிமுறை முழுமை பெற்றிருந்தது.

ஈ) தஞ்சை மராத்திய அரசின் போன்ஸலே வம்சத்து கடைசி அரசர் வெங்கோஜி ஆவார்.

**18. கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு**

(i) சிவாஜியின் கீழிருந்த நீதி நிர்வாகம் பழமையான ஒன்றாகும்.

(ii) நிலையான நீதிமன்றங்களும் விதிமுறைகளும் இருந்தன.

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (i) மற்றும் (ii) தவறு

**19. கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு**

(i) வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியின் பாதுகாப்பை வீழ்ந்து கொண்டிருந்த முகலாயப் பேரரசு நழுவவிட்டது.

(ii) இது நாதிர் ஷாவின் படையெடுப்பிற்கு வழிவகுத்தது

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (i) மற்றும் (ii) தவறு

**20. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ) :** மூன்றாம் பானிப்பட் போர் ஆங்கிலேயரின் அதிகார எழுச்சிக்கு வழிவகுத்தது.

**காரணம் (கா) :** இத்தோல்வி மராத்தியருக்கும் முகலாயருக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று சரி; காரணம் தவறு.

இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

**21. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ) :** காலாட்படை வீரர்கள் மஹாராஷ்டிராவில் இருந்து மட்டும் தேர்வு செய்யப்பட்டனர்.

**காரணம் (கா) :** மராத்தியர் குதிரைப் படையில் பணியாற்ற விரும்பினர்.

அ) கூற்று தவறு; காரணம் சரி.

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது.

இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

ஈ) கூற்று மற்றும் காரணம் சரியானவை.

**22. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருத்தப்படவில்லை.**

அ) சிவாஜி - மலைஎலி

ஆ) முதலாம் பாஜி ராவ் - உத்கிர்போர்

இ) தைமுர் ஷா - லாகூரின் வைஸ்ராய்

ஈ) தேசிங்கு - செஞ்சி

**23. பொருத்துக.**

(i) அமத்யா - 1. அரசரின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள்

(ii) சுமந்த் - 2. பொது ஒழுக்க நடைமுறைகள்

(iii) பண்டிட் ராவ் - 3. போர் மற்றும் அமைதி

(iv) வாக்கிய நாவிஸ் - 4. அரசின் அனைத்து பொது கணக்குகள்

அ) 4, 1, 2, 3 ஆ) 1, 2, 4, 3 இ) 4, 3, 2, 1 ஈ) 1, 4, 2, 3

**24. சிவாஜியின் ஆட்சிக்குப் பிறகு வந்தவர்களைக் கால வரிசைப் படி எழுதவும்.**

அ) சாம்பாஜி, சாஹு, ராஜாராம், இரண்டாம் சாம்பாஜி

ஆ) சாம்பாஜி, ராஜாராம், சாஹு, இரண்டாம் சாம்பாஜி

இ) ராஜாராம், சாம்பாஜி, சாஹு, இரண்டாம் சாம்பாஜி

ஈ) சாம்பாஜி, இரண்டாம் சாம்பாஜி, ராஜாராம், சாஹு

## II. குறுகிய விடை தருக :

### 1. சிவாஜிக்கும் அஃப்சல்கானுக்கும் இடையே நடைபெற்ற பூசல்கள் :

- அஃப்சல்கான் தலைமையிலான பீஜப்பூர் சுல்தானின் படை சிவாஜியை எதிர்த்தது.
- மலைப்பாங்கான பகுதியில் சண்டையிடுவது அஃப்சல்கானுக்கு சிரமமாக இருந்தது.
- சூழ்ச்சியால் சிவாஜியை வீழ்த்த நினைத்த அஃப்சல்கான் தோல்வியே அடைந்தார்.

### 2. புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் :

- சிவாஜி தான் கைப்பற்றிய கோட்டைகளை வைத்துக் கொள்ள அனுமதித்தது.
- சிவாஜி ஒரு மன்சப்தாராகச் செயல்படுவார் என அறிவித்தது.
- பீஜப்பூரைக் கைப்பற்ற முகலாயருக்கு அரசருக்கு சிவாஜி உதவ வேண்டும்.

### 3. சரஸ்வதி மஹால் நூலகம் :

- சரஸ்வதி மஹால் நூலகம் தஞ்காவூரில் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டது.
- இரண்டாம் சரபோஜி என்ற தஞ்சை மராத்திய மன்னரால் செறிவூட்டப்பட்டது.
- பல மொழி நூல்கள், ஓலைச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், ஆவணங்கள் உள்ளன.

### 4. இரண்டாம் சரபோஜி, சமய பரப்புகுழு மற்றும் காலனி ஆதிக்க அரசுக்கு முன்னோடியாகத் திகழ்ந்த விதம் :

- இரண்டாம் சரபோஜி, 1803-இல் நவீன பொதுப் பள்ளிகளை நிறுவினார்.
- அவை தஞ்சாவூரில் நிறுவப்பட்ட முதலாவது நவீனப் பொதுப் பள்ளிகள்.
- கிறிஸ்தவர் அல்லாத உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக நிறுவப்பட்டது.

## III. சுருக்கமான விடை தருக :

### 1. மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள் :

- ◈ மராத்தியர்கள் விசுவாசம், வீரம் ஒழுக்கம், தந்திரம் ஆகியவற்றில் சிறந்தவர்கள்.
- ◈ கொரில்லா தாக்குதல்இரவுநேர மின்னல் வேக தாக்குதலில் கை தேர்ந்திருந்தனர்.
- ◈ துக்காராம், ராம்தாஸ், ஏகநாதர் போன்றோரால் மராத்தியர்களிடம் ஒற்றுமை.
- ◈ தக்காணப் பகுதியில் சிதறிக் கிடந்த மராத்தியர்களை சிவாஜி ஒன்று திரட்டினார்.

---

### 2. நயங்காரா முறை :

- ◈ கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் தமிழ்நாட்டில் நயங்காரா முறை உருவாக்கப்பட்டது.
- ◈ நயங்காரா முறைப்படி தமிழகம் மூன்று பெரிய நயங்காராக்களாக பிரிக்கப்பட்டது.
- ◈ செஞ்சி, மதுரை, தஞ்சாவூர் ஆகியவற்றை நாயக்கர்கள் ஆட்சி செய்து வந்தனர்.
- ◈ அதன் துணை தலைவர்களாக பாளையக்காரர்கள் நியமிக்கப்பட்டனர்.

---

### 3. ராஜா தேசிங்கின் வீரதீரச் செயல்கள் :

- ◈ செஞ்சியின் ஆளுநர் ராஜா தேசிங் முகலாய மன்னருக்குக் கப்பம் கட்ட மறுத்தார்.
- ◈ நவாப் உடனான சண்டையில் 22 வயது ராஜா தேசிங் வீரமரணம் அடைந்தார்.
- ◈ ராஜா தேசிங்கின் இளம் வயது மனைவி உடன்கட்டை ஏறினார்.
- ◈ ராஜா தேசிங்கின் வீரதீரச் செயல்கள் மக்களிடம் கதைப் பாடல்களாக உருவானது.

---

### 4. "நவ வித்யா முறையை அறிமுகம் செய்தது ஒரு முக்கிய முன் முயற்சியாகும்" :

- ◈ "நவ வித்யா" என்ற நவீன கல்வி முறையை மன்னர் சரபோஜி அறிமுகம் செய்தார்.
- ◈ "நவ வித்யா" முறையை அரசவை பள்ளிகளில் அறிமுகம் செய்து வைத்தார்.
- ◈ மேன்மக்கள், ஆதரவற்றோர், ஏழைகள் என அனைவரும் இலவசக் கல்வி பயின்றனர்.
- ◈ நன்கொடைப் பள்ளிகள், கல்லூரிகள், சமஸ்கிருத பாடசாலைகள் ஆகியன நிறுவினார்.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. நவீனக் கல்வி முறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்களிப்பு :

- ◈ இரண்டாம் சரபோஜி, சமய பரப்புக்குழு மற்றும் காலனி அரசுக்கு முன்னோடியாக 1803-இல் நவீன பொதுப் பள்ளிகளை நிறுவினார்.
- ◈ அவை தஞ்சாவூரில் கிறிஸ்தவர் அல்லாத உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக நிறுவப்பட்ட முதலாவது நவீனப் பொதுப் பள்ளிகள்.
- ◈ நவீன கல்வி முறைக்காக "நவ வித்யா" முறையை அரசவை பள்ளிகளில் மன்னர் சரபோஜி அறிமுகம் செய்து வைத்தார்.
- ◈ அனைத்து நிலை பள்ளிகள், நன்கொடைப் பள்ளிகள், கல்லூரிகள், சமஸ்கிருத பாடசாலைகள் ஆகியவற்றை நிறுவினார்.

◈ அரசவை மேன்மக்கள், வேத அறிஞர்கள், ஆதரவற்றோர், ஏழை மாணவர்கள் என அனைவரும் இலவசக் கல்வி பயின்றனர்.

◈ மூலிகை மருந்துகளைத் தயாரித்த "தன்வந்தரி மஹால்" என்ற ஆராய்ச்சி நிறுவனத்தையும் சரபோஜி நிறுவினார்.

---

# பாடம் - 17

## ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. **................................................ இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் உண்மையில் நிறுவப்படக் காரணமான போராகும்.**

   அ) பிளாசிப் போர் ஆ) முதலாம் கர்நாடகப் போர்

   இ) பக்சார் போர் ஈ) வந்தவாசிப் போர்

2. **...................................... உடன்படிக்கையினால் இரண்டாம் ஷா ஆலம் வங்காளம், பீகார் மற்றும் ஒரிஸாவின் திவானி உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்க நேரிட்டது.**

   அ) அலகாபாத் ஆ) மதராஸ் இ) பூனா ஈ) புதுச்சேரி

3. **......................... வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தினார்.**

   அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆ) டியூப்ளே இ) காரன்வாலிஸ் ஈ) ராபர்ட்கிளைவ்

4. **.................... சட்டம் இந்தியாவில் ஆங்கிலேய வணிகக் குழு ஆட்சியை முறைப்படுத்தியது.**

   அ) ஒழுங்கு முறைச் சட்டம் (1773) ஆ) பிட் இந்தியச் சட்டம் (1784)

   இ) பட்டயச் சட்டம் (1813) ஈ) பட்டயச் சட்டம் (1833)

5. **இந்தியாவில் முதல் ஆங்கிலேய ஆளுநராக இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர் .................................**

   அ) காரன்வாலிஸ் ஆ) கானிங் இ) வெல்லெஸ்லி ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

6. **...................... ஜமீன்தார்களோடு காரன்வாலிஸ் நிலையான நிலவரி திட்டத்தை மேற்கொண்டார்.**

   அ) மைசூர் ஆ) பம்பாய் இ) வங்காளம் ஈ) சென்னை

7. **இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் .........................**

   அ) காரன்வாலிஸ் ஆ) தாமஸ் மன்றோ

   இ) ராபர்ட்கிளைவ் ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

8. **தக்கர்களை அடங்கிய ஆங்கிலேய அதிகாரி ........................**

   அ) வில்லியம் ஆதம் ஆ) வில்லியம் ஸ்லீமேன்

   இ) ஜேம்ஸ் ஹாலந்து ஈ) ஜான் நிக்கல்சன்

**9. வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின்படி ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்ட முதல் மாகாணம் ....................................**

அ) நாக்பூர் ஆ) அவத் இ) ஜான்சி ஈ) சதாரா

**10. நிர்பந்தப்படுத்தி வலுக்கட்டாயமாக வரி வசூலிப்பதை ................................. நியாயப்படுத்தியது.**

அ) இரயத்துவாரி சட்டம் ஆ) பிட் இந்தியச் சட்டம்

இ) நிலையான நிலவரித் திட்டம் ஈ) சித்திரவதைச் சட்டம்

**11. .......................................... இந்தியாவில் ஆங்கில மொழியை அலுவல் மொழியாகவும், பயிற்று மொழியாகவும் அறிமுகப்படுத்தினார்.**

அ) காரன்வாலிஸ் ஆ) வில்லியம் பெண்டிங்

இ) தாமஸ் மெக்காலே ஈ) தாமஸ் மன்றோ

**12. சென்னைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு ........................................**

அ) 1837 ஆ) 1861 இ) 1844 ஈ) 1857

**13. ............................................... என்பவரின் முயற்சியால் இந்தியாவில் சதி எனும் உடன்கட்டை ஏறும் முறை ஒழிக்கப்பட்டது.**

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ) வில்லியம் ஜோன்ஸ்

இ) ராஜா ராம்மோகன் ராய் ஈ) தயானந்த சரஸ்வதி

**14. தென் இந்தியாவில் முதல் இருப்புப் பாதை போக்குவரத்து 1856 இல் சென்னையிலிருந்து ..................................... வரை இயக்கப்பட்டது.**

அ) வாணியம்பாடி ஆ) காட்பாடி

இ) விழுப்புரம் ஈ) அரக்கோணம்

**15. 1869 இல் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதன் விளைவாக இந்தியா ஐரோப்பாவிற்கிடையே பயண தூரம் .................................... மைல்களாகக் குறைக்கப்பட்டது.**

அ) 400 ஆ) 3000 இ) 4000 ஈ) 8000

**16. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.**

அ) கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநர் அதன் இயக்குநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆ) துணைப்படைத் திட்டத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியின் இராணுவ வளங்களும் செயல்திறனும் குறைந்தன.

இ) வெல்லெஸ்லி பிரபுவால் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் மதரசா (இஸ்லாமிய கல்வி நிறுவனம்) தொடங்கப்பட்டது.

ஈ) டல்ஹெளசி பிரபு மார்ச் 1835-இல் கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்.

**17. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ) :** ஆங்கிலேய அரசு அணைகளைக் கட்டுவதற்கானப் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டது.

**காரணம் (கா) :** 19ஆம் நூற்றாண்டில் தொடர்ச்சியாகக் கடைசி கால் நூற்றாண்டில் அதிகமான பஞ்சங்கள் நிலவின.

அ. கூற்று சரி; காரணம் தவறு.

ஆ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

இ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ. கூற்று தவறு; காரணம் சரி.

**18. கீழ்க்கண்டவற்றுள், எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது?**

அ) கங்காதர ராவ் - ஜான்சி ஆ) ரகுஜி போன்ஸ்லே - நாக்பூர்

இ) ஷாஜி - சதாரா ஈ) சிந்தியா - கோலாப்பூர்

**19. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| (i) | ஆர்தர் காட்டன் | - 1. சமஸ்கிருத கல்லூரி |
| (ii) | வில்லியம் ஸ்லீமேன் | - 2. கொள்ளிடம் |
| (iii) | வில்லியம் பெண்டிங் | - 3. தக்கர்களை அடக்குதல் |
| (iv) | காரன்வாலிஸ் | - 4. சதி ஒழிப்புச் சட்டம் |

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 2, ,1, 4 ஈ) 2, 1, 4, 3

---

## II. குறுகிய விடை தருக :

### 1. 1773 ஆம் ஆண்டு ஒழுங்கு முறைச் சட்டம் :

- இயக்குநர் குழு - ஊழியர்களின் வரவுசெலவை பிரிட்டிஷ் கருவூலத்திற்கு தெரிவிக்கும்.
- வருவாய் வாரியம் - ஆளுநர், தலைமைத் தளபதி, இரு ஆலோசகர்கள் கொண்ட குழு.
- வங்காளத்தின் ஆளுநராக வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு நியமிக்கப்பட்டார்.

---

### 2. ஆளுநர் தாமஸ் மன்றோ பற்றிய குறிப்பு :

- மெட்ராஸ் மாகாண ஆளுநராக ஏழு ஆண்டுகள் சேவையாற்றினார்.
- தாமஸ் மன்றோ 1822 இல் இரயத்துவாரி முறையை அறிமுகம் செய்தார்.
- கடப்பா, கர்னூல், சித்தூர் மாவட்ட ஆட்சியராகவும் முன்பு பணி புரிந்தார்.

---

### 3. மாகாணம் மற்றும் மாநிலம் - வேறுபடுத்துக :

**மாகாணம் :**

- கம்பெனி தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகம் அமைந்திருந்த இடம் மாகாணம்.
- ஆங்கிலேயர்களால் சென்னை, பம்பாய், கல்கத்தா மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.

**மாநிலம் :**

- மாகாணங்களை நிர்வகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மாநிலங்கள் உருவானது.
- மத்திய மாநிலம், ஒருங்கிணைந்த மாநிலம் போன்றவை உருவாக்கப்பட்டன.

---

### 4. இந்தியக் குடிமைப் பணிக்கு காரன்வாலிசின் பங்களிப்பு :

- திறமையானவர்கள் மற்றும் நேர்மையானவர்களை குடிமைப் பணிகளில் அமர்த்தினார்.
- கம்பெனி அதிகாரிகள் தனியாக வியாபாரம் செய்வதை தடைசெய்தார்.
- காரன்வாலிஸ் பிரபு இந்தியர்களைப் பணியமர்த்த மறுத்தார்.

## III. சுருக்கமான விடை தருக :

### 1. இரட்டை ஆட்சி முறை :

- கம்பெனி முழு அதிகாரத்தையும் தன்வசம் வைத்துக் கொண்டது.
- வெற்று நிர்வாகச் சுமையை மட்டும் வங்காள நவாபிடம் கொடுத்தது.
- நிஜாமத் பொறுப்புகளை பெற்ற கம்பெனி திவானாகவும் நசீமாகவும் செயல்பட்டது.
- திவானின் கடமை வரி வசூலிப்பது. நசீமின் கடமை இராணுவச் செயல்பாடுகள்.

---

### 2. ஜமீன்தார்கள், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலங்களுக்குப் பரம்பரை உரிமைகளை பெற்ற விதம் :

- காரன்வாலிஸ் நிலையான நிலவரி முறையை அறிமுகப்படுத்தினார்.
- ஜமீன்தாரி முறை ஜமீன்தார் என்கிற இடைத்தரகர்களை உருவாக்கியது.
- வாரிசுரிமை மரபுப்படி நிலங்களுக்கு பரம்பரை உரிமைகளை பெற்றனர்.
- ஜமீன்தாரி முறை பயிரிடுவோரைக் குத்தகை விவசாயிகளாக மாற்றியது.

---

### 3. வாரிசு உரிமை இழப்புக் கொள்கை :

- இந்து சட்டப்படி, வாரிசு இல்லாத மன்னர் ஓர் ஆண்மகவு தத்தெடுக்கலாம்.
- தத்தெடுத்த ஓர் ஆண்மகவுக்கு சொத்தில் முழு சுவீகார உரிமையும் உண்டு.
- ஆனால் அனுமதி பெறாமல் அரியணைக்கு வாரிசுகளை நியமிக்க முடியாது.
- சுவீகார வாரிசுகள் அரியணை ஏறுவது செல்லாது என டல்ஹௌசி கூறினார்.

---

### 4. காரன்வாலிஸின் நீதித்துறை நிர்வாகம் :

- மாவட்ட ஆட்சியர்களை நீதி வழங்கும் பணிகளில் இருந்து விடுவித்தார்.
- நீதிமன்றங்கள் சீரமைக்கப்பட்டன. நான்கு பிராந்திய நீதிமன்றங்களை அமைத்தார்.
- கல்கத்தாவில் குற்றவியல், உரிமையியல் மேல்முறையீட்டு நீதிமன்றங்களை அமைத்தார்.
- குற்றவியல் வழக்குகளில் தொடர்புடையவர் சமயம் சார்ந்த சட்டம் பின்பற்றப்பட்டது.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப் படைத் திட்டம் :

- துணைப்படைத் திட்டத்தை ஏற்கும் இந்திய ஆட்சியாளர் தனது சொந்தப் படைகளை கலைத்துவிட வேண்டும்.
- அதற்கு பதிலாக பிரிட்டிஷ் படைகளை ஏற்கவேண்டும். பிரிட்டிஷ் அதிகாரி ஒருவரை ஸ்தானிகராக ஏற்கவேண்டும்.
- பிரிட்டிஷ் படைகளுக்கான பராமரிப்புச் செலவை ஏற்க வேண்டும் அல்லது மாகாணத்தின் ஒரு பகுதியை தரவேண்டும்.
- ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்பைத் துண்டிக்க வேண்டும். குறிப்பாக பிரெஞ்சுத் தொடர்பு இருக்கக் கூடாது.

◈ கூட்டணிக்குள் வரும் இந்திய அரசு பிரிட்டிஷார் அனுமதி இல்லாமல் மற்ற ஐரோப்பியரை பணியில் அமர்த்தக் கூடாது.

◈ பிற அரசுகளோடு பேச்சு வார்த்தையில் ஈடுபடக் கூடாது. மற்றவர் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிடக் கூடாது.

# பாடம் - 18

## ஆங்கிலேய ஆட்சிக்கு தொடக்க கால எதிர்ப்புகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

**1. உடையார் அரசர்களுக்கு எதிராக மராத்தியர்களை வெற்றிகரமாக கையாண்ட பின் ........................................ உண்மையான அரசர் ஆனார்.**

அ) ஹைதர் அலி ஆ) நஞ்சராஜா இ) நாகம நாயக்கர் ஈ) திப்பு சுல்தான்

**2. திப்பு சுல்தான் ........................................ பகுதியைக் கைப்பற்றியதால் மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் தொடங்கியது.**

அ) கள்ளிக்கோட்டை ஆ) குடகு இ) கொடுங்களூர் ஈ) திண்டுக்கல்

**3. பாளையக்காரர் முறை முதன் முதலில் ...................... பேரரசால் நடைமுறைப் படுத்தப்பட்டது.**

(அ) விஜயநகர் (ஆ) பாமனி (இ) காகதிய (ஈ) ஹொய்சாள

**4. நெற்கட்டும் செவல், வாசுதேவ நல்லூர், பனையூர் ஆகிய புலித்தேவரின் மூன்று முக்கியமான கோட்டைகளை ...................... தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.**

அ) மாபுஸ் கான் ஆ) யூசுப் கான் இ) கர்னல் ஹெரான் ஈ) நபிகான் கட்டக்

**5. வேலு நாச்சியார் ........................................ அரசருடைய மகள்**

அ) சிவகங்கை ஆ) புதுக்கோட்டை இ) இராமநாதபுரம் ஈ) பழவநத்தம்

**6. வீரபாண்டிய கட்டபொம்மன் தொடர்பான பிரச்சனைகளை தவறாகக் கையாண்டதால் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆங்கிலேய ஆட்சியர் ...................... ஆவார்.**

அ) W.C. ஜாக்சன் ஆ) A. பானர்மேன்

இ) S.R. லூஹிங்டன் ஈ) P.A. ஆக்னியூ

**7. வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு .......................... ஆகும்.**

அ) என்ஃபீல்டு ரக துப்பாக்கித் தோட்டாக்கள் ஆ) நவீன சீருடை மாற்றம்

இ) புதிய தலைப்பாகை ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்

**8. கோல் எழுச்சிக்குக் காரணமானவர் ..................... ஆவார்.**

அ) பின்த்ராய் மன்கி ஆ) சிடோ இ) புத்த பகத் ஈ) கானு

9. **1857 ஆம் ஆண்டு புரட்சியின் போது இந்தியாவின் கவர்னர் - ஜெனரலாக இருந்தவர்.**

அ) டல்ஹௌசி ஆ) கானிங் இ) மின்டோ ஈ) ஜேம்ஸ் அன்ட்ரியூ ராம்சே

10. **1857 ஆம் ஆண்டு புரட்சியின் போது நானாசாகேப்பின் படைகளைத் தோற்கடித்தவர்.**

அ) ஹென்றி லாரன்ஸ் ஆ) மேஜர் ஜெனரல் ஹோவ்லாக்

இ) சர் ஹியூக் வீலர் ஈ) ஜெனரல் நீல்

11. **சரியான கூற்றினைத் தேர்வுசெய்க.**

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ், திப்பு சுல்தானை பழிவாங்கும் நோக்கில் அணுகினார்.

ஆ) திப்புவின் ஆட்சியை அகற்றியதும் மைசூரில் மீண்டும் உடையார் வம்ச ஆட்சி நிறுவியதும் தென்னிந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் ஆரம்பத்தைக் குறிக்கிறது.

இ) ஆற்காட்டு நவாப் வேலு நாச்சியாருக்கு ஆதரவு அளித்தார்.

ஈ) திருநெல்வேலி காடுகளின் மையத்தில் காளையார் கோயில் உள்ளது.

12. **கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ):** சிவகிரி கோட்டைத் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கை களுக்கு பாதுகாப்பானதாக இருந்தது.

**காரணம் (கா):** மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தில் வலுவான அரண்களோடு அது அமைக்கப்பட்டிருந்தது.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

இ) கூற்று சரி; காரணம், கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

13. **பொருத்துக.**

(i) ஜில்லெஸ்பி - ஸ்ரீரங்கப்பட்டணம்

(ii) மஞ்சி - பாரக்பூர்

(iii) ஜாக்கோபியன் கழகம் - வேலூர் கலகம்

(iv) மங்கள் பாண்டே - சந்தால்கள்

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 4, 1, 2 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 3, 4, 1

---

## II. குறுகிய விடை தருக :

1. **திப்பு சுல்தான் மீது சுமத்தப்பட்ட ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின் (1792) அவமானகரமான விதிமுறைகள் பற்றிய குறிப்பு :**

- திப்பு தனது ஆட்சிப் பகுதியில் பாதியை ஆங்கிலேயருக்குத் தர வேண்டும்.
- திப்பு சுல்தான் போர் இழப்பீடாக மூன்று கோடி ரூபாய் கொடுக்க வேண்டும்.
- திப்பு தனது இரண்டு மகன்களை பிணைக் கைதிகளாக அனுப்ப வேண்டும்.

**2. "வராகன்" (பகோடா) என்பதன் பொருள் :**

- விஜயநகர அரசில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது.
- பகோடா என்பதை தமிழில் வராகன் என்ற பெயரில் அழைத்தனர்.
- திப்பு சுல்தான் ஆட்சியில் ஒரு பகோடா என்பது மூன்றரை ரூபாய்க்கு சமம்.

---

**3. கொங்குப் பகுதியில் தீரன் சின்னமலையின் கிளர்ச்சிகள் பற்றி அறிவன :**

- பிரெஞ்சுக்காரர் மற்றும் திப்பு சுல்தானால் பயிற்சி அளிக்கப்பட்டவர்.
- ஆங்கிலேயருக்கு எதிராக மூன்று முக்கியமான போர்களில் ஈடுபட்டார்.
- தீரன் சின்னமலை சிவகிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

---

**4. "செயில்ராகப்" பற்றி விளக்கம் :**

- பிர்சா முண்டா சோட்டா நாக்பூர் பகுதியில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடினார்.
- முண்டா சமூகத்தினர் பிர்சா முண்டா தலைமையில் ஆங்கிலேயர்களை எதிர்த்தனர்.
- செயில்ராகப் என்ற இடத்தில் முண்டா இன பெண்கள் பலர் கொல்லப்பட்டார்கள்.

---

**5. கான்பூர் படுகொலை :**

- கான்பூர் கிளர்ச்சிக்கு மராட்டிய பேஷ்வா நானாசாகிப் தலைமை வகித்தார்.
- பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 125 ஆங்கிலேயர்கள் கொல்லப்பட்டனர்.
- கான்பூர் படுகொலையில் இறந்தவர்கள் உடல்கள் ஒரு கிணற்றுக்குள் வீசப்பட்டன.

---

## III. சுருக்கமான விடை தருக :

**1. ஆங்கிலேயருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே கையெழுத்தான மதராஸ் உடன்படிக்கைக்கான சூழ்நிலைகள் :**

- கேப்டன் நிக்சனை வீழ்த்திய ஹைதர் அலி கரூர், ஈரோடு கைப்பற்றினார்.
- ஆங்கிலேயர் மீதான தாக்குதலில் தஞ்சாவூர், கடலூர் வரை முன்னேறினார்.
- ஹைதர் அலிக்கு, மராத்தியர் படையெடுப்பின் அச்சுறுத்தல் காணப்பட்டது.
- ஹைதர் அலி - ஆங்கிலேயர் இடையே மதராஸ் உடன்படிக்கை கையெழுத்தானது.

---

**2. 1801 ஆம் ஆண்டு கிளர்ச்சி :**

- 1801 ஆம் ஆண்டு கிளர்ச்சி தென்னிந்திய கலகம் என்று அழைக்கப்படுகிறது.
- ஊமைத்துரை, செவத்தையா, மருது சகோதரர்கள் கிளர்ச்சியை முன்னின்று நடத்தினர்.
- சின்ன மருதுவும், வெள்ளை மருதுவும் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர்.
- பாஞ்சாலங் குறிச்சியில் ஊமைத்துரை, செவத்தையா தலைகள் துண்டிக்கப்பட்டன.

### 3. 1806 ஆம் ஆண்டு வேலூர் புரட்சி :

- ◈ புரட்சிக்கு காரணம் - அக்னியு தலைப்பாகை, சிலுவை பொறிக்கப்பட்ட சீருடைகள்.
- ◈ 1806 ஜூலை 10 ஆம் நாள் அதிகாலை 2 மணிக்கு வேலூர் புரட்சி வெடித்தது.
- ◈ பல ஆங்கில அதிகாரிகள் கொல்லப்பட்டனர். கோட்டை சிப்பாய்கள் வசமானது.
- ◈ ஆற்காட்டில் இருந்த ஜில்லெஸ்பி, புரட்சியை அடக்கி வேலூர் கோட்டையை மீட்டார்.

---

### 4. கோல் பழங்குடியினரின் எழுச்சி :

- ◈ சோட்டா நாக்பூர் ராஜா கிராமங்களை பழங்குடி அல்லாதோருக்கு குத்தகை விட்டனர்.
- ◈ 1831 டிசம்பர் 20 இல் சோட்டா நாக்பூரில் உள்ள சோனிப்பூர் பர்கானா தாக்கப்பட்டது.
- ◈ 700 பேர் கொண்ட கோல் பழங்குடியினர் குழு சோனிப்பூர் பர்கானாவைத் தாக்கியது.
- ◈ 1832 ஜனவரி 26 க்குள் சோட்டா நாக்பூர் முழுவதும் கோல்கள் கட்டுப்பாட்டில் வந்தது.

---

### 5. 1857 ஆம் ஆண்டு புரட்சியின் விளைவுகள் :

- ◈ கானிங் பிரபு முதல் வைஸ்ராய் ஆனார். இந்தியா அரசுச் செயலர் மூலம் ஆளப்படும்.
- ◈ 15 பேர் கொண்ட இந்தியா கவுன்சில் அரசுச் செயலருக்கு உதவியாக இருக்கும்.
- ◈ இந்திய அரசர்களின் கண்ணியம், கௌரவம், உரிமைகள் மதிக்கப்படும்.
- ◈ புதிய பகுதிகள் எதுவும் இணைக்கப்படாது என உறுதியளித்தது.

---

## IV. விரிவான விடை தருக :

### 1. தென் தமிழகத்தில் பாளையக்காரர் அமைப்பு முறை :

- ◈ விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, மதுரை நாயக்க அரசர் பாண்டியப் பேரரசை 72 பாளையங்களாக பிரித்தார்.
- ◈ விஸ்வநாத நாயக்கர் மதுரையைச் சுற்றி வலிமை மிகுந்த ஒரு கோட்டையை எழுப்பி அதில் 72 அரண்களை அமைத்தார்.
- ◈ பாளையக்காரரின் கடமை - அரசருக்கு ஆண்டு தோறும் கப்பம் செலுத்துதல், போரின் போது படை வீரர்களை அனுப்புதல்.
- ◈ பாளையக்காரரின் முக்கியப் பணி - தங்கள் பாளையத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது. நீதி பரிபாலனம் செய்வது.
- ◈ பாளையக்காரர் நிதி திரட்ட சில கிராமங்கள் வழங்கப்பட்டன. பல பட்டங்களும் சிறப்பு உரிமைகளும் வழங்கப்பட்டன.
- ◈ பாளையத்துக்கு உட்பட்ட பகுதியில் குடிமையியல், குற்றவியல் பிரச்சனைகளில் விசாரணை நடத்தி நீதி வழங்கினார்.

---

## 2. 1806 ஆம் ஆண்டு வேலூர் புரட்சிக்கான காரணங்களும் போக்கும் :

**புரட்சிக்கான காரணங்கள் :**

- ◈ மதத்தின் அடையாளமாக சிப்பாய்கள் நெற்றியில் அணிந்திருந்த அனைத்துவித குறியீடுகளும் தடை செய்யப்பட்டன.
- ◈ மீசையை ஒரே மாதிரி வெட்டும்படி அறிவுறுத்தினர். சிப்பாய்களின் சீருடையில் முன்பக்கம் சிலுவை பொறிக்கப்பட்டு இருந்தது.
- ◈ அக்னியு அறிமுகப்படுத்திய தலைப்பாகையில் இருந்த ரிப்பன் மற்றும் குஞ்சம் மிருகத் தோலில் செய்யப்பட்டு இருந்தது.

**புரட்சியின் போக்கு :**

- ◈ 1806 ஜூலை 10 ஆம் நாள் அதிகாலை 2 மணிக்கு வேலூர் புரட்சி வெடித்தது. இதில் 13 அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.
- ◈ கோட்டைக்கு வெளியே இருந்த மேஜர் கூட்ஸ் ஆற்காட்டில் முகாமிட்டு இருந்த கில்லஸ்பிக்கு கடிதம் அனுப்பினார்.
- ◈ காலை 9 மணிக்கு வேலூர் கோட்டையை வந்தடைந்த கில்லஸ்பி குதிரைப்படை உதவியுடன் புரட்சியை அடக்கினார்.

---

## 3. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் :

**புரட்சிக்கான காரணங்கள் :**

- ◈ டல்ஹௌசி பிரபுவின் வாரிசு உரிமை இழப்புக் கொள்கை. ஆங்கில அரசின் அநியாயமான நிலவருவாய் முறை.
- ◈ ஆங்கில அரசு இயற்றிய சதி ஒழிப்புச் சட்டம், பெண்சிசு கொலை தடுப்புச் சட்டம், விதவை மறுமணச் சட்டம்.
- ◈ புதிய என்பீல்டு துப்பாக்கிகளும் பசு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்களும் அறிமுகமாயின.

**புரட்சியின் விளைவுகள் :**

- ◈ விக்டோரியா பேரறிக்கை 1858 நவம்பர் 1 -இல் அலகாபாத்தில் வெளியானது. கானிங் பிரபு முதல் வைஸ்ராய் ஆனார்.
- ◈ இந்தியா ஆங்கிலேய அரசுச் செயலர் மூலம் ஆளப்படும். 15 பேர் கொண்ட இந்தியா கவுன்சில் அவருக்கு உதவி செய்யும்.
- ◈ இந்திய அரசர்களின் கண்ணியம், கௌரவம், உரிமைகள் மதிக்கப்படும். புதிய பகுதிகள் இணைக்கப்படாது என உறுதியளித்தது.

# பாடம் - 19

## நவீனத்தை நோக்கி

### I. சரியான விடையைத் தேர்வு செய்க :

1. **இந்தியாவில் சீர்திருத்தங்கள் பற்றிய பல கருத்துக்கள் தோன்றிய முதல் மாகாணம் ....................**

அ) பஞ்சாப் ஆ) வங்காளம் இ) பம்பாய் ஈ) சென்னை

2. **"இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" .................... ஆவார்.**

அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்த சரஸ்வதி

இ) இராஜா ராம்மோகன்ராய் ஈ) ஆத்மராம் பாண்டுரங்

3. **தேசிய சமூக மாநாடு .................. முயற்சியால் ஒருங்கிணைக்கப்பட்டது.**

அ) ரானடே ஆ) தேவேந்திரநாத் தாகூர்

இ) கேசவசந்திர சென் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

4. **"வேதங்களை நோக்கி திரும்புக"- என்று முழக்கமிட்டவர் .................... ஆவார்.**

அ) இராஜா ராம்மோகன் ராய் ஆ) தயானந்த சரஸ்வதி

இ) விவேகானந்தர் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

5. **கதைகள் மற்றும் வியக்கத்தக்க உவமைகளின் மூலம் ................................ தனது கருத்துக்களை விளக்கினார்.**

அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆ) தேவேந்திர நாத்தாகூர்

இ) கேசவசந்திர சென் ஈ) ஜோதிபா பூலே

6. **"ஒரு பைசா தமிழன்" என்ற வாரப் பத்திரிகையை நடத்தியர் .................... ஆவார்.**

அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்தசரஸ்வதி

இ) வைகுண்டசாமிகள் ஈ) அயோத்திதாச பண்டிதர்

7. **பிரம்மஞான சபை ................. இல் நிறுவப்பட்டது.**

அ) இந்தியா ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

இ) பிரான்சு ஈ) இங்கிலாந்து

8. **தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளராகத் திகழ்ந்தவர் ............... ஆவார்.**

அ) இராமலிங்க அடிகளார் ஆ) காசி விசுவநாத முதலியார்

இ) அயோத்திதாச பண்டிதர் ஈ) தேவேந்திரநாத் தாகூர்

9. **மேற்கத்திய அறிவியலை அறிமுகப்படுத்த சையது அகமது கான் நிறுவிய அமைப்பு ....................**

அ) சத்ய சோதக் சமாஜம் ஆ) சிங் சபா இயக்கம்

இ) அறிவியல் கழகம் ஈ) பிரம்மஞான சபை

**10. இஸ்லாமிய சமூகத்தினரின் சமய மீளுருவாக்கத்தை நோக்கமாக கொண்டிருந்த இயக்கம்.**

அ) தியோபந்த் இயக்கம் ஆ) அகமதியா இயக்கம்

இ) அலிகர் இயக்கம் ஈ) வாஹாபி இயக்கம்

**11. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.**

அ) சுத்தி இயக்கத்தை நிறுவியவர் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்.

ஆ) சமத்துவ சங்கம் வைகுண்ட சாமிகளால் நிறுவப்பட்டது.

இ) இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவியவர் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

ஈ) அகமதியர்கள் பொதுவான மசூதியில் தங்கள் வழிபாட்டினை மேற்கொண்டனர்.

**12. கீழ்கண்ட கூற்று, காரணத்தைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று (கூ) :** சையது அகமது கான் அலிகரில் நிறுவிய நவீனப் பள்ளி, பின்னர் முகமதிய ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.

**காரணம் (கா) :** முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வி கற்பதை அவர் விரும்பினார்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று தவறு; காரணம் தவறு.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானவை.

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

**13. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| (i) | ஆங்கிலேய சமயப்பரப்புக் குழு | - 1. விடிவெள்ளி |
| (ii) | பார்சி செய்தித்தாள் | - 2. வில்லியம் காரே மற்றும் ஜான்தாமஸ் |
| (iii) | தியோபந்த் இயக்கம் | - 3. ராஸ்ட் கோப்தார் |
| (iv) | விவேகானந்தர் | - 4. முகமது காசிம் நநோதவி |

அ) 3, 2, 1, 4 ஆ) 1, 2, 3, 4 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 1, 4, 3

## II. குறுகிய விடை தருக :

### 1. சமூக சீர்திருத்தத்திற்கு இராஜா ராம்மோகன் ராயின் பங்களிப்புகள் :

- ராஜா ராம்மோகன் ராய் உருவ வழிபாடு, பெண் கொடுமை, சாதிமுறையை எதிர்த்தார்.
- 1829 இல் உடன்கட்டை ஏறுதல் குற்றம் என சட்டம் இயற்ற துணையாக இருந்தார்.
- விதவை மறுமணத்தை ஆதரித்தார். குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார்.

### 2. சமூக நீதிக்கு ஜோதிபா பூலேயின் பங்கு :

- ஜோதிபா பூலே புனேயில் பெண்கள் பள்ளி ஒன்றை தொடங்கி நடத்தினார்.
- தாழ்த்தப்பட்ட மற்றும் தீண்டத் தகாத மக்களுக்கான பள்ளியைத் தொடங்கினார்.
- கைம்பெண்களின் குழந்தைகளுக்கு ஒரு இல்லத்தையும் நிறுவினார்.

### 3. "சுத்தி இயக்கம்" ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகக் கருதப்படக் காரணம் :

- "சுத்தி இயக்கம்" "வேதங்களை நோக்கித் திரும்புக" என அழைப்பு விடுத்தது.
- இந்து சமயத்தில் இருந்து மதம் மாறி சென்றவர்களை மீட்டுவருவதே நோக்கம்.
- சுவாமி தயானந்த சரஸ்வதி மக்களை இந்துக்களாக மாற்ற முயன்றது.

---

### 4. ஸ்ரீ நாராயண குருவின் தர்ம பரிபாலன இயக்கத்தின் பங்களிப்புகள் :

- ஈழவர்கள் கோவிலுக்குள் நுழையவும், அரசியல் உரிமை பெறவும் போராடியது.
- கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களைப் பயன்படுத்தும் உரிமையை கோரியது.
- பொதுப் பள்ளிகள் மற்றும் அரசுப் பணிகளில் சேர்வதற்கு அனுமதி கோரியது.

---

### 5. இராமலிங்க அடிகளார் பற்றி அறிவன :

- வள்ளலார் என்று அழைக்கப்பட்டார். சத்திய ஞான சபையை நிறுவினார்.
- வடலூரில் சத்திய தர்ம சாலையை நிறுவி ஏழைகளுக்கு உணவளித்தார்.
- இராமலிங்க அடிகளார் பாடல்கள் திருவருட்பா என்ற பெயரில் திரட்டப்பட்டன.

---

## III. சுருக்கமான விடை தருக :

### 1. எம்.ஜி. ரானடே :

- தேசிய சமூக மாநாடு என்ற அமைப்பை உருவாக்கினார்.
- தக்காணக் கல்விக் கழகத்தை தீவிரமாக முன்னெடுத்தார்.
- விதவை மறுமணச் சங்கம் உருவாகக் காரணமாக இருந்தார்.
- பிரார்த்தனை சமாஜம் மூலம் பல சீர்திருத்தங்களை செய்தார்.

---

### 2. சுவாமி விவேகானந்தர் :

- சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா.
- இராமகிருஷ்ண பரம்ஹம்சரின் முதன்மை சீடராக இருந்தார்.
- தனது குருவின் கருத்துகளை உலகம் முழுவதும் பரப்பினார்.
- 1893 - சிகாகோவில் நடந்த உலக சமய மாநாட்டில் பங்கேற்றார்.

---

### 3. அகமதியா இயக்கம் :

- அகமதியா இயக்கத்தை மிர்சா குலாம் அகமது தோற்றுவித்தார்.
- புனித நூலான குரானில் கூறப்பட்டுள்ள கொள்கைகளை ஆதரித்தார்.
- ஆரிய சமாஜம், கிறித்தவ மதபோதகர்கள் கூறிய கருத்துகளை எதிர்த்தார்.
- பலதாரமணம், பெண்கள் முகத்திரை, பழைய விவாகரத்து விதிகளை ஆதரித்தார்.

**4. சிங் சபா இயக்கம் :**

◈ 1873 ஆம் ஆண்டு சிங் சபா இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

◈ சிங் சபா இயக்கம் இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக உருவானது.

1. கிறித்தவ மதமாற்றம், இந்து சமய மீட்டெடுப்பு நடவடிக்கைகளை எதிர்த்தல்.
2. நவீன மேற்கத்தியக் கல்வியை சீக்கியருக்குக் கிடைக்கச் செய்தல்.

◈ அகாலி இயக்கம் இதன் கிளை இயக்கமாகும்.

---

**5. வைகுண்ட சாமிகள் :**

◈ இயற்பெயர் முத்துக்குட்டி. கன்னியாகுமரியில் சாமித்தோப்பு ஊரில் பிறந்தார்.

◈ அவருடைய போதனைகள் அகிலத்திரட்டு என்ற நூலாக வெளிவந்தது.

◈ வைகுண்ட சாமிகளின் நடைமுறைகள் "ஐயா வழி" என்றானது.

◈ சமபந்தி விருந்துகள் நடத்த நிழல் தாங்கல் உணவுக் கூடத்தை நிறுவினார்.

---

## IV. விரிவான விடை தருக :

**1. இந்தியாவில் கிறித்தவ மதப்பரப்பாளர்கள் ஆற்றிய பணிகள் :**

◈ கிறித்தவ மதப்பரப்புக் குழுவினர் சமூக, பொருளாதார ரீதியாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனப் பள்ளிகள் நிறுவினர்.

◈ தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசுப் பணி வழங்கி அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த முயற்சித்தனர்.

◈ தாழ்த்தப்பட்ட மக்களும் பொதுச் சாலைகளைப் பயன்படுத்துதல் என்ற சமூக உரிமையை நிலைநாட்ட போராடினர்.

◈ தாழ்த்தப்பட்ட பெண்கள் மேலாடைகள் அணிதல் கொள்வது என்ற சமூக உரிமையை மீட்டெடுக்க போராடினர்.

◈ அனாதைக் குழந்தைகள், ஆதரவற்றோரை அழைத்து வந்து தங்களது உறைவிடப் பள்ளிகளில் சேர்த்து கல்வி வழங்கினர்.

◈ பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தங்குமிடம் வழங்கி உதவி செய்தனர்.

---

**2. தமிழ்நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்கள் :**

◈ வைகுண்ட சாமிகள் பின்பற்றிய நடைமுறை "ஐயாவழி" என்றழைக்கப்பட்டது. அவர் சமத்துவ சங்கத்தை நிறுவினார்.

◈ பல சாதியினர் பங்கேற்கும் சமபந்தி விருந்துகள் ஏற்பாடு செய்ய நிழல் தாங்கல் என்ற உணவுக் கூடத்தை நிறுவினார்.

- இராமலிங்க அடிகளார் முற்போக்கு சிந்தனைகள் கொண்டவர். சத்திய ஞான சபை என்ற அமைப்பை நிறுவினார்.
- வடலூரில் சத்திய தர்ம சாலையை நிறுவி, சாதிமத வேறுபாடின்றி எல்லா காலங்களிலும் ஏழைகளுக்கு உணவளித்தார்.
- அயோத்திதாச பண்டிதர் 1908-இல் ஒரு பைசாத் தமிழன் என்ற வாராந்திரப் பத்திரிகையை தொடங்கி நடத்தினார்.
- தீண்டாமையை எதிர்த்துப் போராடிய அவர் ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்று வாதிட்டார்.

**வாழ்த்துகளுடன்**

**மாணவர்கள் நலனுக்காக**